
விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka





# வலம்புரி

# Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆடி 11 வெள்ளிக்கிழமை (27.07.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 220












அரச சார் கட்சிகளால் மேற்கொள்ளப்பட்ட பேரணியில் இருந்து...



ஐக்கிய தேசியக்கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவும் இணைந்து நடத்திய பேரணியில் இருந்து...

# அரசாங்கத்திற்கு எதிரான பேரணியில் பல்லாயிரக் கணக்கானோர் பங்கேற்பு

## பதாகைகளையும் தாங்கியிருந்தனர்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவும் இணைந்து நடத்திய 'மக்கள் அலை' ஆர்ப்பாட்டப் பேரணியில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

## அரசாங்கம் நடத்திய பேரணியில் எதிர்பார்த்தளவு மக்கள் இல்லை

### கூட்டுக்கட்சிகளும் கலந்து கொள்ளவில்லையாம்

(கொழும்பு) கிராண்ட்பாஸ், பத்திரமுல்லை, களனி, கிரிபத்

## பதாகைகளையும் தாங்கியிருந்தனர்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவும் இணைந்து நடத்திய 'மக்கள் அலை' ஆர்ப்பாட்டப் பேரணியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவைச் சேர்ந்த மங்கள சமரவீர,சிறிபதி சூரியாராட்சி ஆகியோரும் கலந்து கொண்டனர். (08 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கம் நடத்திய பேரணியில் எதிர்பார்த்தளவு மக்கள் இல்லை

### கூட்டுக்கட்சிகளும் கலந்து கொள்ளவில்லையாம்

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு ஆதரவாக அரசாங்கமே ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டப் பேரணியில் எதிர்பார்த்த அளவு மக்கள் கலந்து கொள்ளவில்லை என தெரிவிக்கப்பட்டது. மகிந்த அரசாங்கத்திற்கு ஆதரவாக நேற்றுக் காலை 9 மணியளவில் கொழும்பின் கிராண்ட்பாஸ்,பத்திரமுல்லை,களனி,கிரிபத்கொடை,சிலாபம்,மகரகம,மாத்தறை,அநுராதபுரம்,பிலியந்தலை உள்ளிட்ட பல இடங்களில் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடைபெற்றன.

கொழும்பு கிராண்ட்பாஸில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் ஆயிரத்திற்கும் குறைவானோரே (08 ஆம் பக்கம் பார்க்க)

## முத்தையன்கட்டில் விமானத் தாக்குதல்

(கொழும்பு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் விமானப்படையினர் நேற்று தாக்குதல் நடாத்தியுள்ளனர். இருதடவைகள் வன்னி வான் பரப்பினுள் நுழைந்த மிகையொலி யுத்த விமானங்கள் வான்வெளித் தாக்குதலை நடத்தியுள்ள்தாகதெரிவிக் (08 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்கள் வெளியேற்றப்பட்டமை குறித்த வழக்கு நவம்பர் வரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

கொழும்பிலிருந்து அண்மையில் தமிழர்கள் வெளியேற்றப்பட்டமைதொடர்பானவழக்கை மேலெடுத்துச் செல்ல உச்ச நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்துள்ளது. தலைநகரிலிருந்து தமிழர்களை வெளியேற்றியது தொடர்பான அடிப்படை உரிமை மீறல் மனு எதிர்வரும் நவம்பர் மாதம் 28 ஆம் திகதி விசாரிக்கப்படும் எனவும் நீதி மன்றம் தெரிவித்துள்ளது.

நான்கு மனித உரிமை மீறல்களுக்கு எதிராக இந்த வழக்கை கொண்டு செல்வதற்கு நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது என்று மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் சட்டத்தரணியான (08 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் நாட்டில் தஞ்சமடைந்த ஐந்து பேர் தலைமறைவு

(சென்னை)

இலங்கையில் இருந்து தப்பிச் சென்று தமிழ் நாட்டில் தஞ்சமடைந்த ஐந்து பேர் தலைமறைவாகியுள்ளதாக தமிழ்நாடு பொலிஸார் நேற்று அறிவித்துள்ளனர். மண்டபம் அகதி முகாமிற்கு அருகில் நேற்று முன்தினம் தரையிறங்கிய இவர்கள் அங்குள்ள பொலிஸாரிடம் தமது வரவு (08 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய சிறப்புத் தூதுவருடன் தமிழ்க்கூட்டமைப்பு சந்திப்பு

(கொழும்பு)

இந்தியாவின் சிறப்புத் தூதுவருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் இச் சந்திப்பு நடைபெற்றுள்ளது. டெல்லியிருந்து இந்தியாவின் சிறப்புத் தூதுவராக வந்த முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் சகாவும் இராஜதந்திரியுமான ஜி.பார்த்தசாரதியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

கொழும்பை வந்தடைந்த பார்த்தசாரதி ஆளும் அரச தரப்பினரையும் எதிர்க்கட்சியினரையும் சந்தித்து கலந்துரையாடிய பின்னரே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்துள்ளார்.சந்திப்பில் மட்டக்களப்பு, அம்பாறை , திருகோணமலை மா[illegible]வட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரையும் [illegible]ந்தித்துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்ட[illegible]மப்பினர் சார்பில் துரைரட்ணம் , (08 ஆம் பக்கம் பார்க்க)

## அரச வன்முறைகளை நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்

### ஒஸ்லோ நகர சபை உறுப்பினர் உரை

(கொழும்பு)

இலங்கையில் அரசாங்கத்தின் வன்முறைகளை நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நோர்வே தொழிற்கட்சியைச் சேர்ந்த ஒஸ்லோ நகரசபை உறுப்பினர் துறொண்ட ஜென்ஸ்றூட் வலியுறுத்தியுள்ளார்.

நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் நேற்று முன்தினம் கறுப்பு ஜூலை நினைவாக நடத்தப்பட்ட 'சாவிற்குள் வாழ்வோர்' நிகழ்வில் துறொண்ட் ஜென்ஸ்றூட் ஆற்றிய சிறப்புரையிலேயே இதனைத் தெரிவித்தார். தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அவலகங்களின் உண்மை நிலைகளை இத்தகைய வழிமுறைகள் மூலம் எடுத்துரைக்க வேண்டியது அவசியமானது.

மேலும் நீதியான சமாதானத்துடன் தமது தலைவிதியைத் (08 ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# வடக்கிலும் கிழக்கிலும் மூடப்பட்டுள்ள 26 உப தபாலகங்கள் மீண்டும் இயங்கும்

## அமைச்சரவை அங்கீகாரம்

மோதல்கள் காரணமாக வடக்கிலும் கிழக்கிலும் மூடப்பட்ட 26 உப தபாலகங்களை மீட்டும் திறப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இது தொடர்பான பிரேரணையை தபால் தொலைத் தொடர்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார். மீண்டும் திறக்கப்படவுள்ள இந்த உப தபாலகங்களில் கடமை புரியும்அதிபர்களுக்கு மாதாந்த சம்பளம் வழங்குவதற்காக 57 இலட்சம் ரூபாவையும் சேதமடைந்துள்ள தளபாடங்களுக்குப் பதிலாக புதிய தளபாடங்களை கொள்வனவு செய்வதற்காக மதிப்பிடப்பட்டுள்ள 38 இலட்சம் ரூபாவையும் மேலதிக ஒதுக்கீடாக திறைசேரியிலிருந்து பெற்றுக் கொள்ளவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

பாதுகாப்புப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நிலவிய மோதல்கள் காரணமாக வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் 26 உப தபாலகங்கள் மூடப்பட்டன.

இடம்பெயர்ந்த மக்கள் இப்போது மீண்டும் குடியமர்த்தப்பட்டுள்ள நிலையில் அப் பிரதேசங்களில் தபால் சேவையினை வழங்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் நாடாளுமன்றத் தெரிவுக் குழு உறுப்பினர்களும் இது தொடர்பான கேள்விகளைத் தொடுத்து வருவதால் இந்த உப தபாலகங்களை மீண்டும் இயங்க வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இந்த தபாலகங்கள் வருடக் கணக்கில் மூடி வைக்கப்பட்டிருந்தமையால் அவற்றுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி முடக்கப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டு இறுதிவரைக்கும் மூடப்பட்டிருந்த இக் காரியாலயங்கள் மற்றும் அவற்றுக்கான பதவிகள் 2002.10.24 ஆம் திகதியிட்ட நிர்வாக சேவை சுற்றறிக்கை மூலம் ரத்துச் செய்யப்பட்டன.

எனவேதான் இந்த உபதபாலகங்களை மீண்டும் இயங்கச் செய்வதற்காக அமைச்சரவையின் அனுமதி பெறவேண்டிய நிலை ஏற்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் கீரிமலை, மயிலிட்டி, பலாலி, கைதடி, ஊரணி கோஸ்ட், குரும்பசிட்டி, மாவிட்டபுரம், தனங்கிளப்பு, பிரான்பற்று மற்றும் யாழ். நீதிமன்றம் ஆகிய உப தபாலகங்களே மீண்டும் திறக்கப்படவுள்ளன. (ச-5)

# தமிழக முதல்வர் கருணாநிதிக்கு தபால் அட்டையில் கொலை மிரட்டல்



(திருப்பூர்)

முதல்வர் கருணாநிதிக்குத் தீவிரவாதிகள் .பெயரில் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக தமிழகச் செய்திகள் தெரிவித்தன. அது குறித்துத் தெரிய வருவதாவது,

திருப்பூர் தாசில்தாருக்கு நேற்றுக் காலை ஒரு அஞ்சல் அட்டைக் கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தில் முதல்வர் கருணாநிதிக்குக் கொலை மிரட்டல் விடுக்கும் வகையில் எழுதப்பட்டிருந்தது. கடிதத்தில் எழுதப்பட்டிருப்பதாவது, தமிழ்நாடு பொலிஸ் பணியில் சேர வயது வரம்பு 24 இல் இருந்து 29 ஆக உயர்த்த மறுத்துள்ளதால் ஓகஸ்ட் 15 இல் கோட்டையில் கொடி ஏற்றும் முதல்வர் கருணாநிதியைக் கொலை செய்ய திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

அடுத்த ஒரு வாரத்திற்குள் தி.மு.க. கொடி அரைக் கம்பத்தில் பறப்பது உறுதி. 29 ஆம் திகதி நடக்கும் பொலிஸ் தேர்வில் குண்டு வெடிக்கும் இது அல்லாவின் ஆணை- அல் உம்மா இயக்கம்.

இவ்வாறு அதில் எழுதப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து திருப்பூர் தாசில்தார் இக் கடிதத்தில் ஆட்சியர் மற்றும் ஆர்.டி.ஓ. கவனத்துக்குக் கொண்டு சென்றார். பின்னர் திருப்பூர் வடக்கு பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது. (ச-5)

# பாலர் விளையாட்டு விழா

வண். வடமேற்கு கிராம, மாதர் கிராம அபிவிருத்திச் சங்க முன்பள்ளிக் கல்வி நிலைய 10-வது பாலர் விளையாட்டு விழா நாளை பிற்பகல் 1.30 மணிக்கு ஆறுகால்மடம் லெவின் ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி ப.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார். (ச)

# இலங்கை -அவுஸ்திரேலியாவுக்கிடையே புதிய விமான போக்குவரத்து ஒப்பந்தம்

(கொழும்பு)

இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையே புதிய விமானப் போக்குவரத்து ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இருநாடுகளுக்குமிடையே கடந்த 1950 ஆம் ஆண்டு விமானப் போக்குவரத்துத் தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அதன் பின்னர் புதிய ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படாத நிலையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. பயணிகள் மற்றும் பொருள்கள் ஆகியவற்றை எந்த வகை விமானம் மூலமும் அவுஸ்திரேலியாவின் சிட்னி, மெல்போர்ன், பிறிஸ்பேர்ன், பேர்த் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் எந்தவிதக் கட்டுப்பாடுமின்றி எடுத்துச் செல்ல இந்த ஒப்பந்தம் வகை செய்கின்றது.

மேலும் பொருள்களை மட்டும் எடுத்துச் செல்லும் சேவையாக இருப்பின் அவுஸ்திரேலியாவுக்குச்செல்லும் வழியில் எந்தவிதத் தாமதமும் இன்றி செல்வதற்கு முடியும்.

.தேவை ஏற்படின் அந்நாட்டின் எந்த விமான நிலையத்திலும் தரித்துச் செல்லவும் முடியும். சிட்னி, மெல்போர்ன், பிறிஸ்பேர்ன் மற்றும் பேர்த் ஆகிய பகுதிகளுக்கு வாரந்தோறும் 11 முறை விமானப் போக்குவரத்துச் சேவையை இயக்கவும் இந்த ஒப்பந்தம் வகை செய்யும். (எ-5)

# பதவி ஏற்பு வைபவம்

(யாழ்ப்பாணம்)

வட்டு. லயன்ஸ் கழகத்தின் வருடாந்த பதவி ஏற்பு வைபவம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு லயன்ஸ் கழகச் செயலகத்தில் நடைபெறும்.

வட்டு. லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் டாக்டர் எஸ்.சதாசிவம் (ஜே.பி.) தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், பிரதம விருந்தினராக துணைமாவட்ட ஆளுநர் லயன் நிமல் ராஜபக்ஷ கலந்து கொள்கிறார்.

இந்நிகழ்வில் கணனிப் பயிற்சி நெறியில் கல்வி பயின்ற மாணவர்களில் அதி விசேட சித்தியினைப் பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்படும். (அ)

# பிரதேச செயலகங்களுக்கான விளையாட்டுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

எனவே போட்டியாளர்கள் குறித்த நேரத்திற்குள் மைதானத்தில் சமுகமாகியிருக்குமாறு யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கேட்டுள்ளார். (ச)

# விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருக்குடும்ப கன்னியர் மட ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று காலை 8 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விளையாட்டு நிகழ்வுக்குச் சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி நவனீதம் ஜெகதீசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார். (ச)

# குழந்தை கடத்தல்; டச்சு தம்பதி கைது

(கொழும்பு)

இலங்கையிலிருந்து, பிறந்து இரண்டு வாரமேயான குழந்தை ஒன்றை போலி ஆவணங்கள் மூலம் கடத்த முயற்சித்ததாக டச்சு தம்பதியினரை சிறுவர் பாதுகாப்புச் சபையினர் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

பெருவலவில் அக்குழந்தையின் போலி பிறப்புச் சான்றிதழுடன் அத் தம்பதியினர் கைது செய்யப்பட்டனர். இச் சம்பவத்தின் போது நீண்டகாலமாக இத்தகைய குழந்தைகள் கடத்தல் நடைபெறுகிறதோ என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் சிறுவர் பாதுகாப்புச் சபையின் தலைவர் ஜகத் வெள்ளவத்த தெரிவித்துள்ளார். (ச)

# இலங்கை - பாகிஸ்தான் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் சுங்கவரி மறுபரிசீலனை

(கொழும்பு)

இலங்கை – பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கிடையில் மேற்கொள்ளப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுங்க வரிக்கான மறுபரிசீலனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கான பிரேரணையை நிதி அமைச்சர் என்னும் வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்வைத்திருந்தார்.

இலங்கை - பாகிஸ்தானுக்கிடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் ஜுன் மாதம் கைச்சாத்திடப்பட்டது. இப்புதிய ஒப்பந்தத்தில் இடம் பெறவுள்ள மாற்றத்தின் மூலம் பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் 102 பொருள்களுக்கு 100 வீத வரிக் குறைப்பும் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யும் 206 பொருள்களுக்கு 100 வீத வரி குறைப்பும் அமுல்படுத்தப்படவுள்ளது. (ச-5)

# தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு புதிய பணிப்பாளர் சபை நியமனம்

(கொழும்பு)

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கான புதிய பணிப்பாளர் சபையை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கான பிரேரணையை போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெருமா முன்வைத்திருந்தார். இக்குழுவில் 8 உறுப்பினர்கள் இடம்பெறுவர்.

இதில் மூவர் போக்குவரத்து, நிதி, கொள்கை திட்டமிடல் ஆகிய அமைச்சுக்களிலிருந்து உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படும் பிரதிநிதிகளாவர். ஏனைய ஐவரும் அமைச்சரவையின் அனுமதியோடு குறித்த சில அமைச்சுக்களிலிருந்து நியமிக்கப்படுவர்.

இவ்வாறு நியமிக்கப்படுபவர்கள் எதிர் வரும் முதலாம் திகதியிலிருந்து இந்த ஆணைக்குழுவில் அங்கத்தவர்களாகக் கணிக்கப்படுவர். (ச-5)

# பரீட்சை நிலையம் இடமாற்றம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நாளைக் காலை 9 மணிக்கு நடைபெறவிருந்த அவுஸ்திரேலியன் தேசிய இரசாயன வியற் கழக - இலங்கைக் கிளை நடாத்தும் 'இரசாயனவியல் அறிவுப் போட்டி- 2007' தவிர்க்க முடியாத காரணத்தினால் இடமாற்றப்பட்டுள்ளதாக யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எஸ்.பத்மநாதன் அறிவித்துள்ளார்.

புதிய அறிவித்தலின்படி இப் பரீட்சை க.பொ.த. (உ/த) சிரேஷ்ட பிரிவு சென். பற்றிக்ஸ் கல்லூரியிலும் க.பொ.த. (ச/த) கனிஷ்ட பிரிவு சென்.ஜோன்ஸ் கல்லூரியிலும் நடைபெறும். (ச)

# சிவபூமி பாடசாலையின் 3 ஆம் ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சிவபூமி மன விருத்தி பாடசாலையின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழா நாளைக் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறும் விழாவில் யாழ். பல்கலைக் கழகப் பதில் துணைவேந்தர் பேராசிரியர் இ.குமாரவடிவேல் தம்பதிகள் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர்.

சிறப்பு விருந்தினர்களாக பொறியியலாளர் சதாசிவம் கனகசபை, வைத்தியகலாநிதி சிவபாதநாயகி கனகசபை தம்பதிகள் கலந்து கொள்கின்றனர். வாழ்த்துரைகளை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் மருதலிங்கம், தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி பா.தனபாலன் ஆகியோர் வழங்கவுள்ளனர். இந் நிகழ்வில் மனவளர்ச்சிகுன்றிய மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது. (ச)

# சமூக அபிவிருத்திமன்ற மாதாந்தப் பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சமூக அபிவிருத்தி மன்றத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டம் நாளை காலை 9.30 மணிக்குக் காரியாலய மண்டபத்தில் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வைத்தியர் துஷ்யந்தி அரசரட்ணம் கண், காது போன்றவற்றில் ஏற்படும் நோய்களும் அதனைப் பாதுகாக்கும் முறைகளும் பற்றி விளக்கவுள்ளார்.

இதேவேளை இலங்கை காப்புறுதி ஸ்தாபனத்திலிருந்து திருமதி எஸ்.நிகிலா காப்புறுதி பற்றிய விளக்கத்தையும் அவசியத்தையும் பற்றி விளக்கவுள்ளார்.

2007 ஆவணி மாதம் முதற் கிழமை காரியாலய மண்டபத்தில் கண் பரிசோதனை செய்யப்பட்டு தெரிவுசெய்யப்பட்ட 50 அங்கத்தவர்களுக்கு இலவச கண்ணாடி வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)


## ஓராண்டு நினைவலைகள்





அமரர் திருமதி லதா முருகேசு
மண் மகிழ:- 1966.09.02
கண் நெகிழ:- 2006.07.11

அமரர் திருமதி தங்காள் மாணிக்கன்
மண் மகிழ:- 1942.10.28
கண் நெகிழ:- 2006.07.19

ஆண்டொன்று போய் விட்டது, எங்கள் ஆனந்தமும் போய்விட்டது
உங்கள் அழகு முகங்கள், பண்பான பேச்சுக்கள்
மனதை பூரிக்கும் தத்துவங்கள் இவை - எங்கள்
மனதை விட்டு போய் விடுமா?
பெற்றவர்களை, பெறாத அன்னைமார்களை - உங்கள்
உடன் பிறப்புக்களை, உறவுகளை விட்டு
போய் விட்டீர்களே - இனி எம் காலம் முழுவதும் கண்ணீரா?

குருக்கள் வீதி, குப்பிளான் வடக்கு,
குப்பிளான்.

தகவல்,
குடும்பத்தினர்

(199)

# மனிதனின் உறவினர்கள்

சத்யம், ஞானம், தர்மம், இரக்கம், சாந்தம், மன்னிக்கும் மனப்பான்மை இந்த ஆறும் மனிதனின் உண்மையான உறவினர்கள். சத்யம்-தாய், ஞானம்-தந்தை, தர்மம்-சகோதரர், இரக்கம்-நண்பன், சாந்தம்-பத்தினி (மனைவி) மன்னிக்கும் மனப்பான்மை-புத்திரர்கள்.

**ஆன்மீகம்**

மனிதனின் வாழ்க்கை என்பது ஒரு கடலாகும். அதில் ஏற்படும் சுகம், துக்கம் என்பன கடலில் ஏற்படும் அலைகள் போன்றன. ஆன்மீகம் என்பது வாழ்க்கை எனும் கடலின் அலைகளால் அலைக்கழிக்கப்படும். மனிதனுக்கு கலங்கரை விளக்கம் போல் வழிப்படுத்துவதாகும். ஆன்மீகம் என்பது ஆலய வழிபாடு, பூஜை, புனஸ்காரம் ஆகியவற்றைக் குறிப்பது என்பதல்ல.

அனேகத்துவத்தில் ஏகத்துவத்தைக் காண்பதுதான் ஆன்மீகம். அதாவது எங்கும் எதிலும் சர்வவியாபியாய் இருக்கும் ஒரே இறைவன் எம்முள்ளும் நிறைந்திருப்பதை உணர்ந்து கொள்வதுதான் ஆன்மீகம். இறைவன் அன்பு மயமானவன். இந்த அன்பு ஒவ்வொரு மனிதனின் இதயத்திலும் நிலை கொண்டிருக்கின்றது. பண்டைக்காலத்தில் இருந்தே பாரத நாட்டவர் உலகமுழுவதும் நலமாயிருக்கவேண்டும் என்ற சித்தாந்தத்தைக் கொண்டிருக்கின்றனர்.

"எல்லோரும் நலம்வாழ நாம் பாடுவோம்" ஆன்மீகம் என்பது சில ஒழுக்கக் கட்டுப்பாடுகளைத் தன்னகத்தே கொண்டது.

**உணவை வீணாக்கக்கூடாது**

இன்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து 1330 குறட் பாக்களால் சகல நெறிகளையும் உலகுக்களித்த மகாண் திருவள்ளுவர். அவர் ஆன்மீக மார்க்கத்தில் பிரவேசித்து, மற்றவருக்கு உதவி செய்யும் வழக்கத்தை வளர்த்துக்கொண்டு மிகவும் ஒழுங்கமான வாழ்க்கை நடாத்திவந்தார். முழுமையான ஒழுங்கு கட்டுப்பாடு நிறைந்த வாழ்க்கை அவருடையது. அவர் தினமும் உணவருந்த முன், பக்கத்தில் ஒரு கிண்ணத்தில் நீரும், ஒரு ஊசியும் வைக்க வேண்டும் என தன் மனைவிக்குப் பணித்திருந்தார். மனைவியும் அதற்கிணங்கி தினமும் அவ்வாறே செய்து வந்தார்.

ஆனால் வள்ளுவரோ ஒரு நாளேனும் அந்நீரையோ ஊசியையோ பயன்படுத்தவில்லை, மனைவி ஓர் நாள் வள்ளுவரிடமே கேட்டார். சிறந்த ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கும் நீங்கள் ஒருநாளும் பயன்படுத்தாத போது இந்நீரையும் ஊசியையும் வைக்கும் வழக்கம் எதற்கு? என்று கேட்டார். அதற்கு வள்ளுவர் என் தர்மபத்தினியே! என் வாழ்க்கையும் நெறிமுறைகளும் தான் இவ்வூசியையும் நீரையும் பயன்படுத்தும் வாய்ப்பை அளிக்கவில்லை. இந்த ஊசி-நீரின் தத்துவம் என்னவெனில், உண்ணும் போது சிதறும் சோற்றுப் பருக்கைகளை ஊசியால் குத்தி எடுத்து கிண்ணத்து நீரில் கழுவி பின்னர் உபயோகப்படுத்த வேண்டும் என்பதே! அதற்கான வாய்ப்பு கிடைக்காமலே போனது. அவர் உண்ணும் போது சரியான நெறி முறைகளைப் பயன்படுத்தியமையாலேயே... உணவை, ஒரு பருக்கையாவது வீணாக்கக் கூடாது என்பது அவர் விதித்துக்கொண்ட தர்ம நெறி.

**உணவு**

உணவு உடலுக்குப் போஷாக்கை அளிக்கின்றது. உடலிலே உத்தமன் (இறைவர்) உறைந்திருக்கின்றார். அதலால் நல்ல போஷாக்குள்ள உணவும் அந்தப் பிரமனே தான். எனவே உடலைப் பேணி நற்செயல்களில் ஈடுபட்டு, பிறவி எடுத்த பயனாகிய உடலில் உறைந்திருக்கும் உத்தமனை அறிய முயலவேண்டும். இறைவன் எல்லோர் இதயத்திலும் நிறைந்திருக்கின்றார். அன்பே இறைவன் இறைவனே அன்பு. இதயத்தில் ஆசைகள் வளரும் போது அன்பு குறைகின்றது. எனவே ஆசைகளை படிப்படியாகக் குறைத்து அங்கே அன்பை நிரப்பி அன்பில் மலர வேண்டும்.

ஆசைகள் அதிகரிக்க துன்பங்கள் அதிகரிக்கும். ஆசைகள் குறையக்குறைய ஆனந்தம் அதிகரிக்கும்

**சமுதாய நன்மை**

தான் கற்கும் கல்வி அனைத்தும் சமுதாய நன்மைக்குப் பயன்படுத்தப்படவேண்டும் என வேதங்கள் அறைகூவுகின்றன. அனைத்து ஞானங்களும் மனிதனிடம் நிறைய வேண்டும். மனிதனிடம் நல்ல குணங்களும் நிறைந்திருக்க வேண்டும் எனவும் வேதங்கள் கூறுகின்றன.

இவையனைத்தும் கற்கும் கல்வியின் மூலமே உருவாகின்றன. அனைவரின் நலத்திற்கும் உழைக்கும் தன்மை உருவாகவேண்டும். அனைத்து ஞானங்களையும் பெறவேண்டும். அதுமட்டுமல்ல நற்குணங்கள் அனைத்தையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

இவையெல்லாம் நமது கல்வியின் மூலம் அடைய முயற்சி செய்யவேண்டும். ஆனால் இன்றைய கல்விமுறை சமுதாயத்திற்கு நன்மை செய்யும் ஞானத்தையோ நற்குணங்களையோ மனிதனுக்கு அளிப்பதில்லை. வெறும் Bookish knowledge-சாதாரண மேலோட்டமான அறிவாக மாறிப்போகின்றது. புத்தகங்களைப் படித்து உருவாகும் அறிவு நடைமுறை அறிவாக மாறுவதில்லை.

ஆகவே ஒவ்வொரு மாணவனும் தான் படித்த படிப்புக்குத் தகுந்தபடி சமுதாயத்திற்கு, தேசத்திற்குத் தேவையான, நன்மை அளிக்கக் கூடிய செயல்களில் ஈடுபடவேண்டும். தானும் தன் குடும்பமும் நன்றாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டும் இருந்தால் உலகம் என்ன ஆவது? உலகமே இல்லையெனில் உன் குடும்பம் மட்டும் எங்கிருக்கும்? குடும்பமே இல்லையெனில் நீஎங்கே? ஆகவே நீயோ உன் குடும்பமோ அனைத்தும் சமுதாயத்தைச் சார்ந்தே இருக்கின்றீர்கள்! உலகம் க்ஷேமமாக இருக்கும் போதுதான் நீயும் உன் குடும்பமும் நலமாக இருப்பீர்கள்! ஆனால் இந்நாளில், தனிப்பட்ட மனிதனாகட்டும், உலகியலானவர்களாகட்டும், அரசியலைச் சேர்ந்தவர்களாகட்டும் எவரும் சமுதாயத்தின் நன்மையைக் கோருவதாக இல்லை. உலக க்ஷேமத்தை மனதில் கொண்டு செயல்படும் எவரும் காணப்படவில்லை. எல்லா இடத்திலும், சுயநலமும், சுயலாப நோக்கமுமே தாண்டவமாடுகிறது. இவ்வாறு சுயநலமும், சுயலாமும் இருக்கும்வரை நாடு நன்மையடையாது.

**பிரம்மன்**

மனிதன் பிரம்மனைக்காண விழைகிறான். பிரம்மனில் ஐக்யமாகத் துடிக்கிறான் பிரம்ம தத்துவம் என்றால் என்ன? பிரம்ம லோகம் என்றால்என்ன? இங்கே பிரமை என்பது ஒன்றையே பலவாறாகக் காண்பது என்று பொருள். பிரம்மா என்பது பலவற்றாக விளங்குவதிலும் ஒற்றுமை காண்பது எனப் பொருள். ஆனால் இன்றைய மனிதனுக்கு Unity in diversity அனேகத்துவத் தில் ஏகத்துவத்தைக் காண்பது என்பது இயலாமல் போய்விட்டது. ஏகத்துவத்தைப் பலவாறாகப் பிரித்துக்காண முயல்பவன் அதி புத்திசாலியாகக் கருதப்படுகிறான். இந்த புத்திசாலித்தனம் எதற்கும் பயனில்லை. இதனை எரித்து விடுவதும் தவறில்லை. அனைத்திலும் ஒற்றுமையைக்காண முயற்சிப்பதுதான் மனிதனின் முதல் சாதனையாக இருக்க வேண்டும். பிரம்ம தத்துவத்தைப் புரிந்துகொள்ள வேதங்களைப் படித்துப்பயனில்லை. உபநிஷதங்களை உச்சாரணம் செய்வதும் தேவையற்றது.

நன்றி- சனாதன சாரதி (மலரும்)

---

# மக்கள்வங்கி மக்களின் வாழ்க்கைத்தர உயர்ச்சியை இலட்சியமாகக் கொண்டு சேவையாற்றி வருகிறது

## வடவலய உதவிப் பொதுமுகாமையாளர் கே.ஆனந்தராஜா

(பருத்தித்துறை)

"மக்கள் வங்கி நாட்டின் அபிவிருத்தியையும் மக்களின் வாழ்க்கைத்தர உயர்ச்சியையும் இலட்சிய மாகக்கொண்டே பல்வேறு வகையான சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங் கிவருகின்றது. மக்கள் வங்கியின் 46வது ஆண்டுவிழாவையொட்டி பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் சிரமதானம் செய்வதோடு வைத்தியசாலை அபிவிருத்திக்கான உதவிகளையும் வழங்குவது மகிழ்ச்சிக்குரியதாகும்."

மேற்கண்டவாறு மக்கள் வங்கியின் 46வது ஆண்டுவிழாவையொட்டி பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் மக்கள் வங்கியினால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்விலே மங்கள விளக்கேற்றி உரையாற்றிய மக்கள் வங்கி வடவலய உதவிப் பொது முகாமையாளர் கே.ஆனந்தராஜா குறிப்பிட்டார். விழா மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

மக்கள்வங்கியின் 46வது ஆண்டுவிழாவையொட்டி இலங்கையில் 46வைத்தியசாலைகளிலும் வடவலயத்தில் வவுனியா, கிளிநொச்சி, தெல்லிப்பளை, பருத்தித்துறை ஆகிய 4 வைத்தியசாலைகளிலும் சிரமதானம், அபிவிருத்திக்கான நிதிஉதவி வழங்கல் என்பன இடம் பெறுகின்றன.

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.கேதீஸ்வரன் உரையாற்றும் போது குறிப்பிட்டதாவது, வைத்தியசாலைகள் சிறப்பாக இயங்கவேண்டும் இன்றைய நிலையிலே இது மிகக் கடினமான நடவடிக்கையாகவே உள்ளது.

வைத்தியசாலைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குக்கிடைத்து வரும் பணம் பற்றாக்குறையாகவே உள்ளது. இவ்வேளையில் மக்கள்வங்கி வைத்தியசாலை அபிவிருத்திக்கென உதவிகளை வழங்கி வருவது பாராட்டிற்குரியதாகும். வைத்தியசாலைகளின் அபிவிருத்திகளுக்கு எதுவித வேறு பாடுமன்றி சகலரும் இணைந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

மக்கள் வங்கி வடவலய உதவிப் பொது முகாமையாளர் பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரியிடம் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான கட்டிடப் பொருட்களைக்கையளித்தார். நோயாளர்களுடன் கலந்துரையாடி சிறுவர்களுக்கு அன்பளிப்புகளையும் அவர்கள் வழங்கினார்கள்.

இவ்விழாவிலே பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் எம்.சிவநேசன், வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் எஸ்.கிருஸ்ணானந்தன், நெல்லியடி மக்கள் வங்கி முகாமையாளர் எஸ்.சிவஞானசுந்தரம் பிள்ளை, ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கி உதவி முகாமையாளர் ரீ.உதயமூர்த்தி உட்பட பொது மக்களும் கலந்து சிறப்பித்தனர். வைத்தியசாலை பிரதம இலிகிதர் எஸ்.பூபாலசிங்கம் நன்றியுரை நிகழ்த்தினார். (அ-52)

---

# கொழும்பு பல்கலைக்கழக விவகாரத்தில் ஜனாதிபதி தலையிடாவிட்டால் பாரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## பல்கலைக்கழக சேவைகள் சங்கப் பொதுச் செயலாளர்

கொழும்பு பல்கலைக்கழகத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் பங்குபற்றிய எழுதுநர்களை இடைநிறுத்தப்பட்டதன் பின்னர் எழுந்த பிரச்சினைகளைத் தீர்க்கும் விடயத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தலையிட்டு நடவடிக்கையெடுக்கும்படி பல்கலைக்கழக சேவைகள் தொழிற்சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

தன்னைத் தொழிலாளர்கள் தலைவன் என்று கூறிக்கொள்ளும் ஜனாதிபதி ராஜபக்ஷ உடனடியாக இவ்விடயத்தில் தலையிடவேண்டுமென்று பல்கலைக்கழக சேவைகள் தொழிற்சங்க பொதுச்செயலாளர் விஜயதிலகே ஜயசிங்க செய்தியாளர் மாநாட்டில் கூறியுள்ளார்.

தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக பல்கலைக்கழக துணைவேந்தர் சட்ட விரோதமாக பல எழுதுவினைஞர்களை இடைநிறுத்தியதுடன் அவர்களது சம்பளத்தையும் நிறுத்தியுள்ளார் என விஜெயதிலக தெரிவித்தார்.

அத்துடன், உயர்கல்வி அமைச்சினதும், பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினதும் சுற்று நிருபங்களுக்கு மாறாக எந்த ஊழியரையும் இடைநிறுத்தும் அதிகாரம் நிறுவனத் தலைவரொருவருக்கும் கிடையாது எனவும் தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் மே மாதத்தில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற அமைதியின்மைபற்றி கூறுகையில், இது ஒரு தொழிற்சங்க நடவடிக்கையல்ல, ஆனால் நியாயமற்ற முறையில் தொழிலாளர்களின் சம்பளத்தை நிறுத்தியமைக்கெதிரான நடவடிக்கை என்றார்.

ஒருவர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டால் அவரை விடுமுறை எடுக்க அனுமதிப்பதே சாதாரண நடைமுறை என்றும், அவரது சம்பளத்தை நிறுத்துவது அல்ல என்றும் கூறினார். ஆனால் துணைவேந்தர் எட்டு தொழிலாளர்களின் சம்பளத்தை நிறுத்தி நடைமுறையை மாற்றியுள்ளார். இந்த எட்டு தொழிலாளர்களையும் இடைநிறுத்தி அவர்களைப் பொருளாதார நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளதாகவும் குற்றம்சாட்டியுள்ளார்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கும் ஜனாதிபதிக்கும் செய்யப்பட்ட கோரிக்கைகளை அவர்கள் செவிமடுக்காமையால் அவை பயனற்றதாகிவிட்டன. ஜனாதிபதி தன்னை தொழிலாளிகளின் தலைவர் என்று கூறிக்கொள்கின்றார். இந்த விடயத்தில் அதன் நேர்மைத் தன்மைபற்றி நாங்கள் கேள்வி எழுப்ப வேண்டியுள்ளது.

இவைபற்றிமற்றைய மாணவர்சங்கம்போன்றவற்றுடன் இணைந்து பாரிய நடவடிக்கைகளில் இறங்கி அவர்களது உரிமைகளை பெறுவதுடன் பல்கலைக்கழகத்தை பழைய நிலைக்குக் கொண்டுவர நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாக தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

---

# மெதடிஸ்ற் தினவிழா

(பருத்தித்துறை)

இலங்கை மெதடிஸ்த திருச்சபையினால் ஆரம்பித்துவைக்கப்பட்டிருந்த பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப்பாடசாலையில் "மெதடிஸ்ற்" தின விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெற்ற விழா மாணவிகளின் கிறிஸ்தவ கீதத்துடன் ஆரம்ப மாகியது. விழாவிலே கட்டைவேலி நெல்லியடி இலங்கை மெதடிஸ்த திருச்சபை முதன்மைக் குரு அருட்திரு ஏ.அழகராஜா அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (அ-52)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் "மெதடிஸ்ற்" விழாவை அதிபர் திருமதி எஸ்.சுந்தரேசன் மங்கள விளக்கேற்றி ஆரம்பிப்பதையும், மாணவிகள் கிறஸ்தவ கீதம் இசைப்பதையும் கட்டைவேலி நெல்லியடி மெதடிஸ்த திருச்சபை முகாமைக்குரு அருட்திரு ஏ.அழகராஜா அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (பரு.நிருபர்)

# அரசை மக்கள் விரைவில் தூக்கி எறிவார்கள் என்கிறார் தேசிய மரபுரிமை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தை மக்கள் விரைவில் தூக்கி எறிவார்கள் என ஸ்ரீலங்காவின் தேசிய மரபுரிமைகள் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

கடவத்தையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

நாட்டில் வாழ்க்கை செலவு 45 சதவீதமாக உயர்ந்துள்ளது. மக்கள் வாழ முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். தற்போதைய அரசாங்கத்தின் மீது மக்கள் வெறுப்படைந்துள்ளனர். தவறுகளை திருத்தி மக்களுக்கு நிவாரணம் வழங்க தவறினால் விரைவில் இந்த அரசாங்கத்தை மக்கள் தூக்கி எறிந்து விடுவார்கள் என்றும் அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

தொப்பிகலயை கைப்பற்றியதாக இராணுவத்தினர் அறிவித்துள்ளனர். எனினும் அங்கு விடுதலைப்புலிகள் கனரக ஆயுதங்களுடன் தற்போதும் நிலை கொண்டுள்ளதாகவும் எந்த வேளையிலும் அவர்கள் பாரிய தாக்குதல்களை நடத்தலாம் என்றும் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைத்து தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதன் மூலமே தற்போதைய பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்றும் யுத்தத்தின் மூலம் ஒருபோதும் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-5)

# விளையாட்டு விழா

எவர்சைன் முன்பள்ளியின் 2 ஆவது ஆண்டு விளையாட்டு விழா யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் 29ஆம் திகதி காலை 9.00மணிக்கு எவர்சைன் நிறுவன இயக்குநர் செ. ஜெயபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் முதன்மை விருந்தினராக யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை பிரதி அதிபர் சு.தியாகலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக உதவிக் கல்விப்பணிப்பாளர் த. பஞ்சலிங்கமும், சமூக அபிவிருத்தி மன்றத்தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசனும், கௌரவ விருந்தினர்களாக ந.கணேசமூர்த்தியும், நல்லூர்கோட்ட முன்பள்ளிஇணைப்பாளர்திருமதி வி.மாலதியும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

# இரண்டே நிமிடங்களில் வாகன அனுமதிப்பத்திரம்

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம், நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டு மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்தை இரண்டே நிமிடங்களில் வழங்கும் பீடமொன்றைத் திறந்துள்ளனர்.

மேல் மாகாண பிரதேச செயலகங்களில் உள்ள 'வாகனத்தில் இருந்தபடியே' என்ற இத்திட்டம் மூன்றாவது நபர் அனுமதிப் பத்திரம் பெறுவதைத் தடுக்கும்.

இதுவரை தரகர்கள் வாகன உரிமையாளர்களிடம் பணம் பெற்றுக் கொண்டு அனுமதிப்பத்திரங்களை பெற்றுவந்தமை தெரிந்த விடயம் எனத் தெரிவித்த மேல் மாகாண் போக்குவரத்து ஆணையாளர் புத்திக வெஹெர கொட வாகன அனுமதிப் பத்திரங்களைப் பெறுவதற்கு உரிமையாளர் வரவேண்டும். என்ற தேவைப்பாடு இல்லாமையால் பொலிஸாரினால் இதற்கெதிராக நடவடிக்கை எடுக்க முடியவில்லை எனவும் தெரிவித்தார்.

மாலிகாவத்தையிலுள்ள மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் அலுவலகத்தால் நாளாந்தம் 1200 அனுமதிப்பத்திரங்களை வழங்கும். அதன்படி ஆண்டொன்றுக்கு 200, 000 அனுமதிப்பத்திரங்கள் வரை வழங்கப்படும் என ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இத் திட்டம் விரைவில் ஏனைய பிரதேச செயலகங்களுடனும் இணைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# நுகர்வோர் நீதிமன்றங்களை அமைக்கவுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

அரசு இவ்வருடம் நுகர்வோர் விவகார பிரமாணச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வரும்போது முதன் முறையாக நுகர்வோர் விவகாரங்களில் ஈடுபடும் பொருட்டுநுகர்வோர் நீதிமன்றம் நிறுவ உள்ளது.

பிரமத நீதியரசர் சரத் N.சில்வாவும் இந்தப் பிரேரணையை ஏற்றுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன டெய்லி மிரருக்குக் கூறி யுள்ளார்.

இது சம்பந்தமாக நீதி அமைச்சுடன் பேச்சுக்களை நடாத்தி முதற்கட்டமாக கொழும்பிலும் கண்டியிலும் இரு நுகர்வோர் நீதிமன்றங்களை நிறுவுவதற்கான பெரும்பாலான வேலைகளை முடித்துள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

பலவித சந்தைப்படுத்தல் அநீதிகளை அனுபவித்துவரும் நுகர்வோர் இந் நீதிமன்றத்தால் தங்கள் பிரச்சினைகளை முன் வைத்து நட வடிக்கை எடுக்கலாம் என்று தெரிவித்தார்.

பொதுமக்கள், வர்த்தகர்கள் பொருட்களுக்கு குறித்த விலைகளில் இருந்து கூடிய விலைக்கு விற்றல், அளவுகளில் நடைமுறைப் படுத்தும் ஒழுங்கீனங்கள் ஆகியன பற்றிய வழக்குகளை இந் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யலாம் என்றார்.

இந் நீதிமன்றம் நுகர்வோரின் பிரச்சினைகளை திறமையாகவும் நல்ல பயனுடையதாகவும் கையாளும் என்று குணவர்த்தன கூறினார். அத்துடன் இது தொடர்பாக திருத்த மசோதாவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாகவும் கூறினார்.

தற்போதுள்ள சட்ட ஒழுங்குகளின்படி அத்தியாவசியப் பொருட்கள் என் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் பொருட்களின் விலையுயர்வுகள் பற்றி வர்த்தக நிறுவனங்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

ஆனால் இவ்வித விலையுயர்வு களை தடுப்பதற்கான எதுவித இடைக்கால உத்தரவையும் வழக்கு முடிந்து தீர்ப்பு வழங்கும் வரை பெறமுடியாது என்றும் கூறினார். (அ-5)

# அரச ஊழியர் 30 பேருக்கு யாழில் பணியாற்ற அனுமதி

யாழ் .மாவட்டத்திற்கு வெளியே கடமையாற்றிய மத்திய அரசு ஊழியர் 30 பேர் யாழ். மாவட்டத்தில் பணியாற்றுவதற்கு உள் நாட்டு அலுவல்கள் அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் ஏ-9பாதை மூடப்பட்டதை அடுத்து கடமை நிலையங்களுக்கு திரும்பி செல்ல முடியாமல் யாழ். மாவட்டத்தில் தங்கி நின்ற இவர்களுக்கு கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் யாழ். மாவட்டத்தில் கடமை புரிவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள பிரதேச செயலகங்களில் கடமையாற்றிய இவர்களில் பெரும்பாலானவர்கள் பொதுமுகாமைத்துவ உதவியாளர் சேவையை சேர்ந்தவர்களாவர். யாழ். மாவட்டத்தில் கடமை புரிவதற்கு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட 30 ஊழியர்களும் யாழ். மாவட்டத்தில் கடமையேற்றுள்ளனர்.(அ-5)

# தொலைக்காட்சி பெட்டிகளை விற்றாவது பிள்ளைகளுக்கு கணனியை வாங்குங்கள்

## அமைச்சர் அமீர் அலி

தொலைக்காட்சி பெட்டிகளை விற்றாவது பெற்றோர் பிள்ளைகளுக்கு கணனிகளை வாங்கிக்கொடுக்க வேண்டும் என்று மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினரும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சருமான எம். எஸ்.எஸ். அமீர் அலி தெரிவித்தார்.

காத்தான்குடி அல் அமீன் வித்தியாலய மூன்று மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

அனர்த்தம், வறுமை என்பன ஒருபோதும் கல்விக்கு தடையல்ல. அந்த வகையில் சுனாமியால் முற்றுமுழுதாக பாதிக்கப்பட்ட இப் பாடசாலையின் மூலம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் அனைத்துப் பாடங் களிலும் அதி திறமைச் சித்தி பெற்ற மாண வியையிட்டுநான் பெருமையடைகிறேன்.

பெற்றோரும் தங்களது பிள்ளைகளின் கல்வியில் அக்கறை காட்டவேண்டும்.

கற்பிக்கும் ஆசிரியர்களுடன் கலந்தாலோசித்து தமது பிள்ளைகளின் குறை நிறைகளை கேட்டறிந்து குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில் செயற்படவும் வேண்டும்.

இனிவரும் காலங்களில் கணனி, அறிவு ஆங்கில அறிவு கட்டாயமானதாகவே இருக்கும்.

வீட்டில் தொலைக்காட்சி இருக்கிறதோ இல்லையோ கணனி இருக்கவேண்டும். தொலைக்காட்சி பெட்டியை விற்றுவிட்டாவது கணனியைப் பெற்றுக்கொடுங்கள்.

எமது பெண் பிள்ளைகளின் மேல் அதிக நம்பிக்கை கொண்டவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் எங்கு சென்று கற்க விரும்புகின்றனரோ அதற்கான வழிகளை அமைத்துக் கொடுங்கள். (அ-5)

# இந்திய- இங்கிலாந்து 2ஆவது டெஸ்டில் யுவராஜ்சிங்குக்கு வாய்ப்பு கிடைக்குமா?



ராகுல் டிராவிட் தலைமையிலான இந்திய கிரிக்கெற் அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான போட்டித் தொடரில் லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நடந்த முதல் டெஸ்ட் டிரா ஆனது.

இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதும் 2ஆவது டெஸ்ட் போட்டி நாட்டிங் காமில் உள்ள டிரென்ட் பிரிட்ஜ் மைதானத்தில் தொடங்குகிறது.

முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் தோல்வி உறுதியாக இருந்தது. ஒரு விக்கெற்றை கைப்பற்றி இருந்தால் இங்கிலாந்து வெற்றி பெற்றிருக்கும். ஆனால் மழை பெய்ததால் இந்திய அணி மயிரிழையில் தோல்வியிலிருந்து தப்பியது.

அதே நேரத்தில் டோனியின் பொறுப்பான ஆட்டம் சற்று கைகொடுத்தது. லார்ட்ஸ் டெஸ்டில் இந்தியாவின் பேட்டிங் மோசமாக இருந்தது. கேப்டன் டிராவிட் , டெண்டுல்கர் ஆகியோரது பேட்டிங் சிறப்பாக இல்லை.

7 பேட்ஸ்மேன்களுடன் களம் இறங்கிய இந்திய அணி எதிர்பார்த்த அளவுக்கு ரன் குவிக்கவில்லை.இதனால் பேட்டிங் வரிசையில் மாற்றம் கொண்டுவரலாம்.ஒருநாள் போட்டியில் அதிரடியாக விளையாடக்கூடிய யுவராஜ்சிங்குக்கு வாய்ப்பு வழங்கலாம்.

முன்னாள் வீரர்கள் வடேகர் , பரூக் என்ஜினீயர் இந்தக் கருத்தை வலியுறுத்தியுள்ளனர். பயிற்சியின் போது கங்குலி காயமடைந்தார் . இதனால் அவர் விளையாடுவது உறுதியாக தெரியவில்லை. அவர் அல்லது லட்சுமண் நீக்கப்பட்டு யுவராஜ்சிங்குக்கு வாய்ப்பு கொடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய அணியில் பந்துவீச்சில் மாற்றம் இருக்காது என்று தெரிகிறது. இங்கிலாந்தின் அணியின் பேட்டிங் வரிசை எதிர்பார்த்ததைவிட சிறப்பாகவுள்ளது. பீட்டர்சன் அணியின் முதுகெலும்பாகத் திகழ்கிறார். இக்கட்டான நேரத்திலும் சிறப்பாக ஆடக்கூடியவர் காலிங்வுட், கூக், ஸ்டாரஸ் போன்ற சிறந்த பேட்ஸ்மேன்களும் ,ஆண்டர்சன் சைடுபாட்டம், பனேசர் போன்ற சிறந்த பந்து வீச்சாளர்களும் உள்ளனர்.

நாட்டிங் காமில் பெய்து வரும் மழையால் வீரர்களின் பயிற்சி பாதிக்கப்பட்டது. இதனால் இன்றைய டெஸ்ட் மழையால் பாதிக்கப்படவும் வாய்ப்பு இருக்கிறது. இரு அணிகளும் இன்று மோதுவது 96ஆவது டெஸ்ட் ஆகும். இதுவரை மோதிய 95 டெஸ்டில் இந்தியா 17 போட்டியிலும் இங்கிலாந்து 34 போட்டியிலும் வெற்றிபெற்றன. 44 டெஸ்ட் டிரா ஆனது. (அ-5)

# சச்சினின் இடத்தை தோனி நிரப்புவார் சேவக் தெரிவிப்பு



(புதுடில்லி)

வரும் காலங்களில் சச்சினின் இடத்தை தோனி நிரப்புவார் என சேவக் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து தொடருக்கான இந்திய அணியிலிருந்து புறக்கணிக்கப்பட்ட சேவக் தற்போது உள்ளூர் போட்டிகளில் ஆடி வருகிறார் .

இவர் அளித்த பேட்டி சில ஆண்டுகள் முன்பு வரை இந்தியாவில் சிறந்த அதிரடி பேட்ஸ்மேன் சச்சின்தான். சிறு வயது முதல் அவரது பேட்டிங்கை பார்த்துத்தான் வளர்ந்தோம்.

ஆனால் அவர் தற்போது தனது பேட்டிங் ஸ்டைலை மாற்றிக் கொண்டுள்ளார். அவரது இடத்தை நான் அல்லது தோனி நிரப்ப வேண்டும்.

## விளையாட்டு

தற்போது உள்ள வீரர்களில் சிறப்பாக அதிரடி காட்டுபவர் தோனிதான் இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடரில் இடம் பிடிக்க முடியும் என எண்ணுகிறேன்.

எனது சர்வதேச கிரிக்கெற் வாழ்வுக்கு டுவென்டி 20 உலக கோப்பை தொடர் புத்துயிர் அளிக்கும் உடற்தகுதி விஷயத்தில் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறேன். தினமும் நான்கு மணி நேரம் பயிற்சி செய்கிறேன்.

விக்கெற்றுகள் இடையே விரைவாக ஓடுவதிலும் பயிற்சி செய்கிறேன். உடற்தகுதி இருந்தால் மட்டுமே ரன்கள் குவிக்க முடியும். இந்திய வீரர்கள் யாருக்கும் புகை பிடிக்கும் மது அருந்தும் பழக்கம் இல்லை. தொடரை வென்றால் மட்டுமே ஷாம்பெய்ன் அருந்துவர். மற்ற அணியினரை பற்றி எனக்கு தெரியாது .சமீபத்தில் அமெரிக்கா சென்று கிளப் அளவிலான போட்டிகளில் பங்கேற்றது மகிழ்ச்சியான அனுபவம். அங்கும் கிரிக்கெற்றுக்கு அமோக ஆதரவு காணப்படுகிறது. இவ்வாறு சேவக் தெரிவித்தார்.

இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் போட்டி தொடருக்கான இந்திய அணி விரைவில் தேர்வு செய்யப்படவுள்ளது. இதில் சேவக் இடம்பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-5)

## இன்று ஒரு தகவல்

### அஞ்சல் அட்டைகள் !

ஒருத்தன் தன்னுடைய நண்பனை வழியிலே பார்த்தான். "என்னப்பா... கடிதம் போட்டேனே, கிடைத்ததா" என்று கேட்டான். "ஓ... கிடைத்ததே!" என்றான் அவன்.

இவன் உடனே... "ஏன்டா பொய் சொல்கிறாய்...? நான் உனக்குக் கடிதமே போடவில்லை!... சும்மா தான் கேட்டேன்" என்றான். அவன் பார்த்தான்.

"கடிதம் போட்டேன் என்று நீ பொய் சொல்லும் போது... அது கிடைத்தது என்று நான் பொய் சொல்லக் கூடாதா?..." என்றான்.

இப்படிப்பட்டவர்கள் சிலபேர் இருந்தாலும் கூட, இன்று கடித மூலமாகத் தொடர்பு கொள்ளாதவர்கள் இருக்கவே முடியாது!

அந்த அளவுக்கு அது அவசியமான ஒன்றாக ஆகிவிட்டது! இந்த அஞ்சல் அட்டைகள் (Postcard) எப்படி ஆரம்பமானது தெரியுமா?

ஆஸ்திரியா நாட்டிலே ஒரு பேராசிரியர் இருந்தார். அவர் பெயர் இம்மானுவேல் ஹெர்மென். அவர் ஒருநாள் ஒரு பத்திரிகையிலே ஒரு கட்டுரை எழுதினார்.

இது நடந்தது 1869 இல். அவர் எழுதிய கட்டுரையிலே... மக்கள் அதிகம் செலவு இல்லாமல் ஒருவருக்கொருவர் தகவல் பரிமாறிக்கொள்வது எப்படி? என்பதைப் பற்றி எழுதியிருந்தார். அதற்குச் சில யோசனைகளையும் அந்தக் கட்டுரையிலே அவர் தெரிவித்திருந்தார்.

அந்தக் கட்டுரையை எல்லாரும் படித்தார்கள். அரசாங்கத்தின் கவனத்துக்கும் அது போனது ! ஆகா... இது நல்ல யோசனையாக இருக்கிறதே என்று அரசாங்கத்துக்கும் தோன்றியது.

அவ்வளவு தான்! உடனே அந்த யோசனையை நடைமுறைக்குக் கொண்டுவந்தார்கள். பேராசிரியர் இம்மானுவேல் ஹெர்மெனின் யோசனைப்படி அச்சடித்த அரசு முத்திரையோடு... அரசாங்கம் அஞ்சல் அட்டைகளை வெளியிட ஆரம்பித்தது.

1869 அக்டோபர் 7ஆம் திகதி இது நடந்தது. உலகின் முதல் அஞ்சல் அட்டை வெளிவந்தநாள் அது. அப்பொழுது அதன் பெயர் என்ன தெரியுமா.?

கரஸ்பாண்டிங் கார்ட்-(Corresponding card) அதன் பின்னர் உடனடியாக அமெரிக்காவிலேயும் இது மாதிரியான கார்ட்களை வெளியிட்டார்கள். பின்பு 1870இல் இங்கிலாந்திலேயும் இதை வெளியிட்டார்களாம்!

அதை வெளியிட்ட முதல் நாளன்று என்ன நடந்தது தெரியுமா? மக்கள் எல்லாம் ஏதோ நியாயவிலை கடையிலே நிற்பதுபோல்... நீண்ட கியூவரிசையிலே நின்று இதை வாங்கினார்களாம்! நமது நாட்டிலே முதல் அஞ்சலகம் 1927 இல் கல்கத்தாவிலே ஆரம்பித்ததாம்.

இன்று அஞ்சலகம் இல்லாத இடமே இல்லை... அந்த அளவுக்கு அஞ்சல் போக்குவரத்து...!

அன்று... உள்நாட்டிலே... ஒருவருக்கொருவர் தகவல் பரிமாற்றம் செய்துகொள்ள... மலிவான ஓர் அட்டையை அரசாங்கம் வெளியிடலாம் என்று ஒரு பேராசிரியர் எழுதிய கட்டுரை இன்று எந்த அளவுக்கு வளர்ச்சியடைந்திருக்கிறது பார்த்தீர்களா?

ஒருத்தன் ஒரு தபால் பெட்டிக்குப் பக்கத்திலே தலையில் கைவைத்தபடி நின்றுகொண்டிருந்தான். அப்பொழுது அவ்விடத்துக்கு வந்த ஒருவன் கேட்டான்... "என்ன நடந்தது...? ஏன் தலையில் கைவைத்தபடி நிற்கிறாய்?"

"கொஞ்ச நேரத்துக்கு முன்னால் இந்தத் தபால் பெட்டியிலே ஒரு கார்ட் எழுதிப் போட்டேன். விபரம் எல்லாம் நன்றாகத்தான் எழுதியிருக்கிறேன்.. ஆனால் அட்ரஸ் எழுத மறந்துவிட்டேன்..." என்றான்.

உடனே வந்தவன் "அதற்காக கவலைப்படாதே... நானும் உன்னைப் போலத்தான்... நான் போட்ட கார்ட்டிலே விலாசம் எல்லாம் பின்கோடு உட்பட சரியாக எழுதியிருக்கிறேன்... ஆனால் விபரம் எழுத மறந்துவிட்டேன்.

இருந்தாலும் கவலைப்படாதே... கொஞ்ச நேரத்திலே தபால்காரர் வருவார்... அவர் பெட்டியைத் திறந்ததும் எங்கள் கடிதங்களைக் கேட்டு வாங்கிக் கொள்ளலாம்" என்றான்.

"கொஞ்ச நேரத்துக்கு முன் தபால்காரர் வந்தார் அவரிடம் கேட்டேன்... அப்புறம் தான் மனசுக்கு ரொம்ப கஷ்டமாகப் போச்சு...!" என்றான் அவன். "ஏன்?" என்று கேட்டான் இவன்... "இது தபால்பெட்டி இல்லை" என்று தபால்காரர் சொல்லிவிட்டாரே என்றான் அவன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# வடக்குக்கு செல்வதற்கான ஏ-9 வீதியை திறப்பதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளதா?

## ஜயலத் ஜயவர்த்தன எம்.பி.கேள்வி

வடக்கு-கிழக்கு மக்களுக்கு அரசாங்கம் அனைத்து வசதிகளையும் செய்துகொடுக்கும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அப்படியானால் வடக்குக்கு செல்வதற்கான ஏ-9 வீதியை திறப்பதற்கு அரசாங்கம் தயாரா? என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன கேள்வியெழுப்பினார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது,

கிழக்கு மாகாணம் மீட்கப்பட்டதை தொடர்ந்து வடக்கு கிழக்கு மக்களுக்கு அனைத்து வசதிகளும் செய்துகொடுக்கப்படும் என்று ஜனாதிப்தி மற்றும் அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

அப்படியானால் வடக்குக்கு செல்வதற்கு இருக்கின்ற ஒரே தரைவழிப் பாதையான ஏ-9 வீதியை அரசாங் கம் திறக்குமா? என்று கேட்கின்றோம்.

அந்த வீதி மூடப்பட்டுள்ளமையினால் மக்கள் எவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர் என்று அரசாங்கத்துக்கு தெரியுமா? இதனால் வடக்கு மக்களுக்கு உணவு மற்றும் மருந்து வகைகளுக்கு எந்தளவு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று அரசாங்கத்துக்கு தெரியாதா?

வடக்கு கிழக்கு மக்கள் குறித்து அரசாங்கம் உண்மையிலேயே அக்கறை செலுத்துமானால் முதலில் மூடப்பட்டுள்ள ஏ-9 வீதி திறக்கப்படவேண்டும். அரசாங்கம் அதனை முதலில் செய்துவிட்டு வடக்கு கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தி குறித்து மார்தட்டிக்கொள்ளட்டும்.

அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கான செயற்பாட்டு ரீதியான வேலைத்திட்டங்களை ஐக்கிய தேசியக்கட்சி ஆரம்பித்துள்ளது. விரைவில் எமது அரசாங்கம் ஒன்றை நிறுவி மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கான சூழலை உருவாக்குவோம். அனைத்து இன மக்களினதும் உரிமைகளை உறுதிப் படுத்துவோம்.

வன்னியில் இலட்சக்கணக்கான மக்கள் உணவு மற்றும் மருந்துகள் இன்றி தவித்துக்கொண்டிருக்கின்றனர். இம் மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை சர்வதேசம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுகின்றோம். தற்போதைய நிலைமையில் சர்வதேசத்திடம் மட்டுமே நாங்கள் கோரிக்கை விடலாம். (அ-5)

## குரு பூர்ணிமா

யாழ்.பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தில் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை குரு பூர்ணிமா தினவிழா அதிகாலை 5.30 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகிநண் பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறும்.

இவ்விழாவில், ஸ்ரீ சத்திய சாயிசேவா நிறுவன ஆன்மீக கல்வி இணைப்பாளர் திருமதி ம.இராசரத்தினம் சிறப்புச் சொற் பொழிவாற்றுவார். பாலவிகாஷ் மாணவர்களின் பெற்றோர் சார்பில் இ.தர்மரட்ணம் "பாலவிகாஷ் வகுப்புக்கு வருவதனால் ஏற்பட்ட நன்மைகள்" என்றத்லைப்பிலும் தொடர்ந்து பால விகாஷ் பழைய மாணவன் சண்முகலிங்கம் விநோதன் "பால விகாஷ் வகுப்பிற்கு வந்ததனால் ஏற்பட்ட மாற்றங்கள்" எனும் தலைப்பிலும் உரையாற்றுவார்கள். அத்துடன் வடபிராந்திய ஸ்ரீசத்திய சாயிசேவா நிறுவன ஆன்மீக இணைப்பாளர் க.மகேஸ்வரன் "குருதத்துவம்" எனும் பொருள்பற்றி விளக்குவார். (அ)

## இராசி பலன்

27.07.2007

(ஆடி 11, வெள்ளிக்கிழமை).

துவாதசி காலை 07.15 மணிவரை

மூலம் பின்னிரவு 02.02 மணிவரை

இராகுகாலம் 10.32-12.02 மணிவரை

சுபநேரம் 06.02-07.32 மணிவரை

பிரதோச விரதம்

| | |
|---|---|
| மேடம் | ஆன்றோர் ஆசி, உடல்உழைப்பு, அச்சமான நிலை, ஆரோக்கியக்குறைவு. |
| இடபம் | திருடர் பயம், கௌரவக்குறைவு, காரிய தாமதம், பொருள்விரயம். |
| மிதுனம் | மனோதைரியம், கீர்த்தி, சயனசுகம், தெய்வ தரிசனம். |
| கடகம் | தேகநலன், பணவருவாய், திடீர்பயணம், செய் தொழில் விருத்தி. |
| சிங்கம் | அஜீரணரோகம், வியாபாரநன்மை, காரிய இடையூறு, குடும்பக்கவலை. |
| கன்னி | தன்னம்பிக்கைக்குறைவு, கல்வியில் ஆர்வம், ரோகநிலை, பகைவர் நேசம். |
| துலாம் | கூட்டுமுயற்சி, தெய்வதரிசனம், பெருமையடைதல், பொருள் சேர்க்கை. |
| விருச்சிகம் | மதிப்புக்குறைவு, எடுத்த காரியம் தாமதமாகும், பணவிரயம், பித்தரோகம். |
| தனுசு | பெரியோர் உதவி, நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, வெகுமானம். |
| மகரம் | உறவினர் சந்திப்பு, திடீர்பயணம், சுபசெலவு, சயனசுகக்குறைவு. |
| கும்பம் | தெய்வதரிசனம், காரிய அனுகூலம், உறவினர் வருகை, போசனசுகம். |
| மீனம் | சுபநிகழ்ச்சி, செய்தொழில் விருத்தி, பிறர் உதவி, தேகநலன். |

- வளவன்

## ஆன்மீகச் சொற்பொழிவு

தொண்டமனாறு செல்வசந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையினால் மாதம் தோறும் வெளியிடப்படும் "ஞானசுடர்" ஆன்மீக சஞ்சிகையின் ஆடிமாத இதழ் இன்று வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணிக்கு வெளியிடப்படவுள்ளது.

இதன் வெளியீட்டுரையை நில அளவையாளர் ஆ.தங்கமயிலும் மதிப்பீட்டுரையை ஆசிரியர் க.நவரத்தினமும் வழங்குவார்கள். (அ-35)

* * *

புலோலி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக சொற்பொழிவு தொடரில் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆலயத்தின் பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் "ஆழ்வார்களின் வரிசையில்" என்னும் விடயம் பற்றி பகீரதன் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (அ-35)

## விண்ணப்பம் கோரல்

கொழும்பு 15, உயர் தொழில்நுட்ப நிறுவனத்தால் 2007/2008 கல்வியாண்டுக்கு, உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (HNDE) பாட நெறிகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்ப முடிவுத்திகதி 2007-08-18 ஆகும்.

விண்ணப்பதாரர்கள், 2006இல் அல்லது அதற்கு முன்னர் க.பொ.த.(உ/த) பழைய பாடத்திட்டத்தில், பிரயோக கணிதம், தூய கணிதம், பௌதிகம், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் ஒரே அமர்வில் சித்திபெற்றிருக்க வேண்டும் அல்லது 2006 இல் அல்லது அதற்கு முன்னர் க.பொ.த.(உ/த) புதிய பாடத்திட் டத்தைப் பயின்றவர்கள் இணைந்த கணிதத்துடன் (Combined Maths) ஆகக்குறைந்தது மூன்ற பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன் க.பொ.த.(சா/த) பரீட்சையில் ஆங்கில மொழியில் சித்தியுடையவராக இருக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத்திகதியன்று 23 வயுதுக்குக் குறைந்த விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேலதிக விபரங்களை 27ஆம் திகதி வர்த்தமானியிலோ அன்றி வலம்புரிக்காரியாலயத்திலோ பார்வையிடலாம். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய மூகவரி "பணிப்பாளர், உயர் தொழில்நுட்ப நிறுவனம், இல.42, ரொட்ரிகோ பிளேஸ், மட்டக்குளி, கொழும்பு 15".

## விளையாட்டு விழா

ஆவரங்கால் மேற்கு மத்திய முன்பள்ளியின் 33ஆவது விளையாட்டுவிழா நாளை பி.ப.12.30 மணிக்கு, முன்பள்ளி மைதானத்தில் ஆ.தியாகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில், பிரதம விருந்தினராக வலிகிழக்குப் பிரதேச சபைச்செயலாளர் த.நடராசாவும், சிறப்பு விருந்தினர்களாக சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன், புத்தூர் பிரதேசசபைப் பொறுப்பாளர் திருமதி கோமளவல்லி தமிழ்ச்செல்வன், ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அதிபர் அ.அருணந்திசிவம், ஆவரங்கால் மேற்கு கிராம சேவையாளர் கணேசலிங்கம் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி முன்னாள் அதிபர் வ.ஆறுமுகமும், ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய முன்னாள் அதிபர் முத்துக்குமார சுவாமியும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

* * *

நீர்வேலி ஸ்ரீகணேசா மூன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா-நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஸ்ரீகணேசா முன்பள்ளி, ஸ்ரீகணேசா அறநெறிப் பாடசாலை முன்றலில், நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை அதிபர் ச.வேலழகன் தலைமையில் இடம்பெறும். இவ்விழாவில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் C.A.மோகன்றாஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக, சமூக அபிவிருத்தி மன்ற தலைவர் திருமதி ந.ஜெகதீசன், வலி கிழக்குப் பிரதேசசபைச் செயலாளர் த.நடராஜா, சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தயாபரன் மலர்மகள், நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி அதிபர் இ.குணநாதன், நீர்வேலி சீ.சீ.த.க.பாடசாலை அதிபர் செ.செல்வநாயகம், புத்தூர் பிரதேசசபை உள்ளூராட்சி உதவியாளர் த.முரளிதரன், கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலை அதி பர் ச.லலீசன் ஆகியோரும் கௌரவவிருந்தினர்களாக, நீர்வேலி தெற்கு கிராமஅலுவலர் சு.சண்முக வடிவேல், நீர்வேலி கிராமிய வங்கி முகாமையாளர் க.முருகையா, சமாதான நீதவான் ந.சிவசீலன், அரசகேசரிப்பிள்ளையார் கோவில் பரிபாலனசபைத் தலைவர் இ.தியாகராசா, ஆசிரியர் க.கணேசராஜா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (அ)

# சபரிமலைக்குச் செல்ல பெண் பக்தர்களுக்கு தனி நேரம் ஒதுக்க கேரள அரசு திட்டம்

(திருவனந்தபுரம்)

சபரிமலை ஐயப்பன் கோவிலில் அனைத்து வயதுப் பெண்களும் தரிசனம் செய்யும் வகையில் தனி நேரத்தை நிர்ணயிக்க கேரள அரசு முடிவு செய்துள்ளது.

கேரள மாநிலம் சபரிமலையில் கோயில் கொண்டுள்ள ஐயப்பனுக்கு உலகம் முழுவதும் ஏராளமான பக்தர்கள் உள்ளனர். சுவாமி ஐயப்பன் மீது பெண்களும் மிகுந்த பக்தி வைத்துள்ளனர். ஆனால் சபரிமலை கோவிலில் 10 வயது முதல் 50 வயது வரையிலான பெண்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் கார்த்திகை மாதத்தில் ஆண்கள் இருமுடி கட்டி சபரிமலைக்கு செல்வது வழக்கம். அதுபோல பெண்களுக்கும் அனுமதி அளிக்கவேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. அதே நேரத்தில் பல்வேறு தரப்பில் இருந்து எதிர்ப்பு கணைகளும் தோன்றி வருகின்றன. இந்த நிலையில் கேரள சட்ட சபையில் இந்தப் பிரச்சினை நேற்று முன்தினம் எதிரொலித்தது.

காங்கிரசைச் சேர்ந்த சிவதாசன் நாயர் மற்றும் சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இது தொடர்பாக கேள்விஎழுப்பினர். அதற்குபதிலளித்த கேரள தேவசம்போர்டு மந்திரி சுதாகரன் கூறியதாவது,

சபரிமலையில் பெண்களும் தரிசனம் செய்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. 1940 ஆம் ஆண்டில் திருவாங்கூர் அரச குடும்பத்தை சேர்ந்த இளவரசி சபரிமலைக்கு சென்றுள்ளார். ஆலப்புழா மாவட்டத்தில் அம்பலப்புழா என்ற இடத்தை சேர்ந்த பல்வேறு வயது பெண்களும் கடந்த நூற்றாண்டில் சபரிமலைக்கு செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அவர்கள் மாளிகைபுரம் என்று அழைக்கப்பட்டு வந்தனர். 1990ஆம் ஆண்டில் அப்போதைய கேரள அரசு தாக்கல் செய்த ஒரு சத்தியக் கடதாசி காரணமாக கேரள நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு பின்னரே சபரிமலைக்கு பெண்கள் செல்வதற்கு விதிக்கப்பட்ட தடை தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சபரிமலையின் தற்போதைய நடைமுறைகள் தொடரவேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடு. ஆனாலும் ஒரு குறிப்பிட்ட பிரிவு பெண்களின் வழிபாட்டு சுதந்திரத்துக்கு மறுப்பு தெரிவிப்பது நல்ல நடைமுறை அல்ல. இந்து மதத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ள அனைத்துப் பெண்களும் சபரிமலைக்கு செல்ல அனுமதிக்கப்படவேண்டும்.

நம்பிக்கை மற்றும் வழக்கம் போன்றவை பின்னாளில் மாற்றத்துக்கு உரியவையே. சபரிமலையில் பூசை செய்பவர்கள் இதற்கு முன்பு கோவிலில் உள்ள குளத்தில் குளித்துவிட்டு பூசைகள் செய்தனர். ஆனால் தற்போது குழாய் நீரில் குளித்துவிட்டு பூசை செய்கிறார்கள்.

பல்வேறு அமைப்பை சேர்ந்தவர்களும் பெண்களுக்கு அனுமதி வழங்க வற்புறுத்தி வருகின்றனர். எனவே சபரிமலையில் அனைத்து வயதுப் பெண்களும் தரிசனம் செய்யும் வகையில் தனியாக ஒரு புனித சீசன் (மண்டல பூசை போன்று) ஏற்படுத்தலாம் என்பதில் கேரள அரசு ஆர்வமாக உள்ளது. மேலும் பெண்களை அனுமதிப்பது தொடர்பாக முடிவு எடுக்க ஆணைக் குழு ஒன்றை அமைக்குமாறு உயர் நீதிமன்றில் கேரள அரசுசார்பாக சத்தியக் கடதாசி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு மந்திரி சுதாகரன் தெரிவித்தார். (அ-5)

# "ஹரி பொட்டர்" ஏழாவது பாகம் விற்பனையில் உலக சாதனை படைத்தது

(நியூயார்க்)

புத்தக உலகில் இதுவரை எந்த புத்தகமும் செய்யாத சாதனையை சமீபத்தில் வெளியான ஹரி பொட்டர் புத்தத்தின் ஏழாவது பகுதி செய்துள்ளது.

ஹரி பொட்டர் புத்தகத்தின் ஏழாவது பகுதி கடந்த சனிக்கிழமை உலகம் முழுவதும் வெளியிடப்பட்டது. கடைசிப் பாகம் என்பதால் உலக மக்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த இப் புத்தகம் வெளியான முதல் நாளே பிரிட்டனில் 26 இலட்சம் பிரதிகள் விற்று சாதனை படைத்தது.

அமெரிக்காவில் மட்டும் 83 இலட்சம் பிரதிகள் விற்பனை ஆகியுள்ளன. ஹரி பொட்டர் ஆண்டு டெத்லி ஹாலோஸ் என்ற பெயரில் ஆங்கிலத்தில் வெளியாகியிருக்கும் இப் புத்தகம் ஜெர்மனியில் நான்கு இலட்சம் பிரதிகள் விற்பனை ஆகின. வெளியான முதல் நாளன்று ஒரு விநாடிக்கு 128 புத்தகங்கள் விற்பனையாகியதாக புத்தக விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஹரி பொட்டர் புத்தகத்தின் ஆறாவது பகுதியான ஹரி பொட்டர் ஆண்டு திஹாப் பிளட் பிரின்ஸ் பிரிட்டனில் வெளியான முதல் நாள் ஏறக்குறைய 20 இலட்சம் பிரதிகள் விற்பனை ஆகின. அதனுடன் ஒப்பிடும்போது வெளியான அன்று 26 இலட்சம் பிரதிகள் விற்று ஏழாவது பாகம் உலக சாதனை படைத்துள்ளது.

இது ஆறாவது பாகத்தின் முதல் நாள் விற்பனையை விட 32 சதவீதம் அதிகம். ஏழாவது பாகம் வெளியாவதற்கு முன்பே இன்டர் நெட்டில் புத்தகம் குறித்த பல தகவல்கள் வெளியானதால் புத்தக விற்பனை சிறிதளவு குறைந்ததாகக் கூறப்படுகிறது. புத்தகம் வெளிவருவதற்கு முன்பே முன்னணி ஆங்கில பத்திரிகைகள் புத்தக விமர்சனங்களை வெளியிட்டன. இருப்பினும் ஹரி பொட்டருக்கு மக்களுக்கு இடையே இருந்த எதிர்பார்ப்பு குறையவில்லை. (அ-5)

# நல்ல நண்பர்களாக எலியும், பூனையும்

எலியும், பூனையும் பரம்பரை எதிரிகள் என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஆனால் கொலம்பியா நாட்டில் பூனையும், எலியும் நண்பர்களாக உள்ளனர்.

அங்குள்ள பகோட்டா நகர பொலிஸார் வெடிகுண்டுகளை மோப்ப சக்தி மூலம் கண்டுபிடிக்க எலிகளை பயன்படுத்து கிறார்கள். அவற்றுக்கு உதவுவதற்காக பூனைகளை பயன் படுத்துகின்றனர்.

உரிய பயிற்சிகள் காரணமாக இவை இரண்டும் நண் பர்களாக உள்ளன. (அ-5)



WORLD NEWS உலக தரிசனம்

# பராகுவேயைப் பணக்கார நாடாக மாற்றவல்ல இனிப்பு மூலிகைச் செடி கண்டுபிடிப்பு

(ஆசுன்சியான்)

மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள பராகுவே மக்களுக்கு பணத்தை கொட்டப் போகும் மூலிகைச்செடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சர்க்கரையை விட 300மடங்கு இனிப்புத் தன்மை கொண்ட மூலிகைச் செடியை அதிகளவில் உற்பத்திசெய்ய பராகுவே அரசு முடிவுசெய்துள்ளது.

தென் அமெரிக்காவில் உள்ள பராகுவே நாடு மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளது. இந்த நாட்டு மக்களில் 60 இலட்சம் பேர் வறுமையில் வாடி வருகின்றனர். பராகுவே நாட்டின் பழங்குடியின மக்களான குவாரானி இன மக்கள் 'ஸ்டெவியா' என்ற மூலிகைச் செடியை வளர்த்து வருகின்றனர். அவர்கள் குடிக்கும் பானங்களில் இனிப்புத் தன்மையை அதிகரிக்க 'ஸ்டெவியா' மூலிகைச் செடியை குவாரானி மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

பராகுவே நாட்டின் ஆசுன்சியான் நகரில் உள்ள பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் மருத்துவகல்லூரி 'ஸ்டெவியா' மூலிகைச் செடி குறித்து ஆய்வு நடத்தியது. இந்த மூலிகைச் செடி சர்க்கரையைவிட 300 மடங்கு இனிப்புத்தன்மை அதிகம் கொண்டது. நீரிழிவு உயர் இரத்த கொதிப்பு, பற்சிதைவு ஆகியவற்றால் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவிகரமாக உள்ளது என்பது அந்த ஆய்வில் தெரிய வந்தது. இதையடுத்து கோககோலா நிறுவனமும் அமெரிக்காவை சேர்ந்த கார்கில் என்ற நிறுவனமும் ஸ்டெவியா மூலிகைச் செடியிலிருந்து 'ரிபையானா' என்ற பெயரில் ஸ்வீட்னர் தயாரிக்க முடிவு செய்துள்ளனர். உலகளவில் ஸ்டெவியா மூலிகைச் செடியை உணவுப்பொருளாக பயன்படுத்தும் போக்குக் குறைவாகவே உள்ளது.

அமெரிக்காவில் இது தடை செய்யப்பட்ட ஒன்று. ஐரோப்பிய நாடுகளில் இதன் பயன்பாடு மிகவும் குறைவாகவே உள்ளது. சீனாவில் தற்போது தான் பிரபலமாகி வருகிறது. அர்ஜென்டினா, பிரேசில், ஈக்குவேடார், ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகளிலும் ஸ்டெவியா மூலிகைச் செடி தற்போது பிரபலமடைந்து வருகிறது. கோககோலா மற்றும் கார்கில் நிறுவனங்கள் எடுத்துள்ள முடிவு உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. எனவே ஸ்டெவியா மூலிகைச் செடி சப்ளை செய்யும் படி பல்வேறு தரப்புகளிலிருந்து பராகுவே நாட்டில் உள்ள நிறுவனங்களுக்கு அழைப்புகள் வந்த வண்ணம் உள்ளன. 12 கிலோ ஸ்டெவியா மூலிகைச் செடி இலைகளில் இருந்து ஒரு கிலோ ஸ்டெவியா பொடியை உற்பத்தி செய்யலாம்.

ஒரு கிலோவுக்கு தரத்துக்கு ஏற்றவாறு 300 முதல் ரூபா 8 ஆயிரம் வரை கிடைக்கும். எனவே பல ஆயிரம் ஏக்கரில் ஸ்டெவியா செடியை பயிர் செய்யும் பணியில் பராகுவே நாடு திட்டமிட்டுள்ளது. சீனாவிலும் ஸ்டெவியா செடி பயிர் செய்யப்பட்டு வந்தாலும் பராகுவே நாட்டில் தான் அதற்கான சூழ்நிலை காணப்படுகிறது. சீனாவை விட மூன்று மடங்கு அளவில் பராகுவேயில் இந்த செடி வளரும். எனவே பராகுவே நாட்டு மக்களின் ஏழ்மையை போக்கு பசுமை தங்கமாக ஸ்டெவியா மூலிகைச் செடி கருதப்படுகிறது. (அ-5)



தென்கொரியாவில் விலங்குகள் கொல்லப்படுவதற்கு எதிராக விலங்குகளை போல வேடமணிந்து போராடுகிறார்கள் இவர்கள்.

# ஜனாதிபதி மாளிகையின் தனியான சமையல் அறை கலாமின் காலத்தில் பாவிக்கப்படவே இல்லை

(புதுடில்லி)

இந்தியாவின் புதிய ஜனாதிபதி பிரதீபா பாட்டீலுக்கு ஊத்தப்பமும், பருப்பும் தான் மிகவும் பிடித்தமான உணவு. கலாமும் பிரதீபாவும் சைவ பிரியர்கள் என்பதால் ராஷ்டிரபதி பவன் தொடர்ந்து சைவமாகவே இருக்கப் போகிறது. ஐந்து ஆண்டுகளாக ராஷ்டிரபதி பவனை அலங்கரித்த அப்துல் கலாம் குறித்து மூத்த அதிகாரி ஒருவர் கூறியதாவது,

ஐந்து ஆண்டுகளாக அப்துல்கலாம் இட்லி, தோசை, சாம்பார் மற்றும் தயிர் சாதம், ஊறுகாய், அப்பளம் ஆகியவற்றையே மிகவும் விரும்பிச் சாப்பிட்டார். ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதிக்கு உணவு தயார் செய்ய தனியாக ஒரு சமையல் அறை உள்ளது. ஆனால் அந்த அறையை கலாம் கடைசி வரை பயன்படுத்தவே இல்லை. ஜனாதிபதி மாளிகை ஊழியர்களுக்கு உணவு தயாரிக்கப்படும் பொது சமையல் அறையில் இருந்தே தனக்கு உணவுதயாரித்து அளிக்கும் படி அவர் கூறியிருந்தார். பொதுவாக ஜனாதிபதியாக இருப்பவர் இரவு உணவு முடிக்கும் வரை ஏராளமான ஊழியர்கள் காத்து இருப்பர்.

இந்த நடைமுறையை கலாம் மாற்றி விட்டார். தனது உணவை சூடுபடுத்தி வைக்க ஒரே ஒரு ஊழியர் மட்டும் காத்திருந்தால் போதுமானது என்று தெரிவித்துவிட்டார். ஐந்து ஆண்டுகளாக இதே நிலை தான் நீடித்தது.

அதேபோல் இரவு நேரத்தில் ஏதாவது உதவி தேவைப்பட்டால் சம்பந்தப்பட்ட ஊழியரிடம் நேரடியாக கலாமே பேசி விடுவார். இந்த விஷயத்தில் நடைமுறையை அவர் பின்பற்றியதே இல்லை.

கலாமின் உறவினர்கள் 50 பேர் டில்லியை சுற்றிப்பார்க்க வந்தனர். அப்போது கூட பொது சமையல் அறையில் இருந்து தான் உணவு தயாரித்து அளிக்கப்பட்டது. உறவினர்கள் தங்கியிருந்த போது ஆன செலவுத் தொகையையும் அளிக்க கலாம் முன்வந்தார். அப்துல்கலாம் வழக்கமாக மதிய உணவை சாப்பிடமாட்டார்.

பழவகைகள் சாப்பிட மிகவும் ஆர்வம் காட்டுவார். இதற்காக ஒரு சிறிய பூந்தோட்டத்தை உருவாக்கி அதில் சீன ஆரெஞ்ச் பழத்தை உற்பத்தி செய்தோம். அந்தப் பழம் சுவையாக இல்லாவிடிலும், விற்றமின் சி சக்தி நிறைந்தது என்பதால் கலாம் மிகவும் விரும்பி சாப்பிடுவார். ஜனாதிபதியாக இதுவரை இருந்த வர்கள் இரவில் சீக்கிரமே தூங்க சென்று விடுவர்.

இந்த நடைமுறையையும் கலாம் மாற்றினார். இரவு 1.00 அல்லது 1.30 மணிக்கு தான் தூங்கச் செல்வார். காலை 6.30 மணிக்கு எழுந்துவிடுவார். இரவு 12 மணிக்குத்தான் இரவு உணவை உட்கொள்வார். அதேபோல் காலை 10.00மணிமுதல் நிகழ்ச்சி நிரல் களை ஏற்படுத்திக் கொண்ட ஒரே ஜனாதிபதி கலாம் தான். இவ்வாறு அந்த அதிகாரி கூறினார். கலாமின் செயலர் பி.எம்.நாயர் கூறியதாவது,

கலாம் எப்போதும் எளிமையாகவே காணப்படுவார். 2003ஆம் ஆண்டு யூலை 14ஆம் திகதி காலை 8.40 மணிக்கு எனது அலுவலகத்தில் இருந்த போன் ஒலித்தது. அந்த போனை எடுத்துப் பேசினேன். மறு முனையில் ஜனாதிபதி இதுபோல ஜனாதிபதியே நேரில் பேசுவது மிகவும் அபூர்வம். அப்போது அவர் என்னிடம் மென்மையான குரலில் 'மிஸ்டர் நாயர் நேற்றிரவு என்னால் சரியாக தூங்க முடியவில்லை. எனது அறை ஒழுகியதே இதற்குக் காரணம்' என்றார்.

இதைக் கேட்டதும் நான் அதிர்ச்சியில் உறைந்து போய்விட்டேன். வேறு ஒருவர் ஜனாதிபதியாக இருந்திருந்தால், இதுபோன்ற பிரச்சினைக்கு சம்பந்தமே இல்லாவிடிலும் எனது வேலை பறிபோய் இருக்கும்.

ஆனால் கலாம் அதுபோன்று குறை கூறும் அளவுக்கு கூறவில்லை. நான் அதிர்ச்சி அடைந்து விட்டேன் என்பதை உணர்ந்து கொண்ட அவர் உடனே 'எனக்குத் தெரியும் உடனடியாக இப்பிரச்சினையை நீங்கள் சரி செய்து விடுவீர்கள்' என்று கூறி சமாதானப் படுத்தினார். நானும் சுதாகரித்து கொண்டு உடனே சரி செய்து விடுகிறேன் என்று கூறினேன்.

இந்த அளவுக்குமிகவும் எளிமையாக வாழ்ந்தவர் கலாம். இவ்வாறு நாயர் கூறினார். (அ-5)

இரண்டு வழுக்கைத் தலையர்கள் – ஏன் ஒரு சீப்புக்காகச் சண்டை செய்ய வேண்டும்.

–ரஷ்யா

வலம்புரி

# இருமுனை எதிர்ப்புப் பேரணி அரசு பறிபோகும் அறிகுறியா?

தலைநகர் கொழும்பில் ஆளுந்தரப்பும், எதிர்க்கட்சிகளும் இருவேறு ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளன. அரசுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவு என்பன இணைந்து நடத்திய ஆர்ப்பாட்டம், எதிர்க்கட்சிகளின் வலிமையைக் காட்டுவதற்கானதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அரசைக் கலைக்கும் வகையிலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பதவி விலகக் கோரியும் எதிர்க்கட்சிகளினால் நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் தனித்து அரசைக் கவிழ்க்கும் நோக்குடன் மட்டுமன்றி,

ரணில் விக்கிரமசிங்கவினதும், மங்கள சமரவீரவினதும் இணைவைக் காட்டுவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பக்கம் தாவிய உறுப்பினர்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பலத்தை நிரூபிப்பதையும் நோக்கமாகக் கொண்டதாகும்.

அதே நேரம் அரசுக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் ஆர்ப்பாட்டத்தை முறியடிக்கும் வகையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் ஆளுந்தரப்பினரும், அரசுக்கு ஆதரவான ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்தியுள்ளன.

இரு தரப்பும் ஏககாலத்தில் பேரணியை நடத்தியமையால் எத்தரப்பின் பலம் உயர்வு பெற்றுள்ளது என்பதைக் கணிப்பீடு செய்வது சுலபமாக அமையும்.

அது பற்றிய ஆய்வுகளை அடுத்து வரும் நாள்களில் எதிர்பார்க்கலாம். ஆனால் இலங்கை என்ற நாட்டில் ஜனநாயக அரசு இல்லை என்பதும், மக்களின் தேவைகளை வலியுறுத்தும் அரசியல்வாதிகள் இல்லை என்பதும் உறுதியாகின்றது.

அதாவது நாடு யுத்தத்தில் மூழ்கிக் கிடக்கின்றது. அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏற்றத்தினால் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

வேலையின்மை, வறுமை, பஞ்சம் என்ற சோகரேகைகள் எங்கும் படர்ந்திருக்கின்றன. இந்நிலையில் அரசு யுத்தம் நடத்துவதிலேயும், எதிர்க்கட்சிகள் தங்கள் அரசியல் லாபத்தையும் மையமாகக் கொண்டு செயற்படுகின்றன.

இதன் காரணமாகவே அரசும், எதிர்க்கட்சிகளும் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளன. எனினும் எதிர்க்கட்சிகள் நடத்திய ஆர்ப்பாட்டம் நியாயப்படுத்தப்படக் கூடியவையாக, அவற்றின் காரணங்கள் அமைந்துள்ளன.

எதுவாயினும் எதிர்க்கட்சிகள் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி - ரணில், மங்கள கூட்டு மகிந்தவின் அரசுக்கு ஆபத்தாக அமையும்போல் தெரிகின்றது.

# உண்ணாவிரதப் போராட்டம் குறித்து பிரித்தானிய சட்டத்தரணிகள் கவலை

(லண்டன்)

பிரித்தானியாவிலிருந்து இலங்கைக்கு தங்களைத் திருப்பியனுப்பக் கூடாது என்று தடுப்பு முகாம்களிலுள்ள ஈழத் தமிழர்கள் தொடர்ந்தும் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகின்றனர். ஹார்மன்ட்ஸ்வேர்த் தடுப்பு முகாமில் உள்ளோர் இந்தப் போராட்டத்தைத் தொடங்கி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து ஹம்ப்ஸைர் கேம்பிரிட்ஸைர் மற்றும் ஹேட்விக் ஆகிய தடுப்பு முகாம்களில் உள்ள ஈழத் தமிழர்களும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஹார்மன்ட்ஸ்வேர்த் தடுப்பு முகாமில் 28 பேரும் ஓகிங்ரனில் 23 பேரும் கேம்பிரிட்ஸைர் மற்றும் ஹம்ப்ஸைர் முகாம்களில் 10 பேரும் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

கடந்த ஜூலை 9 ஆம்திகதி அகதிகள் அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் அலோசியஸ் யூட்கிஸ்ரி மற்றும் கோபாலசாமி இளையராஜா ஆகியோர் ஹார்மன்ட்ஸ்வேர்த் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர்.

தங்களை இலங்கைக்குத் திருப்பியனுப்ப எதிர்ப்புத் தெரிவித்து இருவரும் உண்ணாவிரதப் போராட்டத்தை முதலில் தொடங்கினர். அவர்களைத் தொடர்ந்து தடுப்பு முகாமிலுள்ள பிற ஈழத் தமிழர்களும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பில் பிரித்தானியாவிலுள்ள தமிழ்ச் சட்டத் தரணிகள் அமைப்பு தனது கவலையை வெளியிட்டுள்ளது. அந்த அமைப்பின் தலைவர் கிறிஸ் சரவணன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

பலவந்தமாக இலங்கைக்கு பிரித்தானியக் குடியேற்றத் திணைக்கள அதிகாரிகள் அனுப்ப முயற்சிப்பதை எதிர்த்துத் தடுப்பு முகாம்களில் உள்ள ஈழத் தமிழர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவது குறித்து நாம் ஆழ்ந்த கவலை கொள்கின்றோம்.

இலங்கைத் தீவில் ஈழத் தமிழர்கள் பாரிய மனித உரிமைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். கடத்தல்கள், காணாமல் போதல்கள், சித்திரவதைகள், நீதிக்குப் புறம்பான படுகொலைகள் எனப் பல்வேறு மனித உரிமை மீறல்கள் அங்கு நிகழ்கின்றன.

அவசர காலச் சட்டம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ஆகியவற்றின் மூலம் இலங்கை அரச அதிகாரிகளும் இராணுவ அதிகாரிகளும் பாரிய அதிகாரங்களைக் கையில் வைத்துக் கொண்டு இத்தகைய மீறல்களில் ஈடுபடுகின்றனர்.

கொழும்பு உள்ளிட்ட பல்வேறு இடங்களில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் பணத்துக்காகக் கடத்தப்படுகின்றனர். படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இத்தகைய வன்முறைகளில் அரசாங்கம் நேரடியாக ஈடுபடுவதால் எதுவித விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று மனிதாபிமானப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கம், நிர்வாகம் பொலிஸ், நீதித்துறை மற்றும் இராணுவம் ஆகியவற்றில் 99 வீதமான சிங்களவர்களே உள்ளனர். அப்படியான நிலையில் அகதிகள் அந்தஸ்து கோரியோரை இலங்கையிடம் ஒப்படைத்தால் அவர்கள் பாதுகாப்பாகவும் கண்ணியமாகவும் வாழ முடியாது என அவர் தெரிவித்தார். (ச-5)

# இலங்கை செயற்பாடுகளை அறிய இந்திய றோவுக்குள் சி.ஐ.ஏ. ஊடுருவல்

## முன்னாள் றோ அதிகாரி தகவல்

(சென்னை)

இலங்கை தொடர்பிலான நடவடிக்கைகளை அறிவதற்கான றோ நிர்வாகத்திற்குள் அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ. ஊடுருவியது என்று றோ முன்னாள் அதிகாரியான பி. ராமன் குறிப்பிட்டுள்ளார்.

பி.ராமன் எழுதிய நூல் ஒன்றில் இத்தகவல் இடம்பெற்றுள்ளது. அதிலுள்ள மேலும் சில தகவல்கள் வருமாறு,

தற்போதைய இந்தியப் பிரதமரின் அலுவலகத்திற்குள் பிரான்ஸ் நாட்டின் உளவுத்துறை ஊடுருவியிருக்கின்றது. இந்தியப் பிரதமருக்கு றோ மற்றும் இந்திய புலனாய்வுத் துறையான ஐ.பி. ஆகியன அனுப்பிய அதி முக்கியத்துவம் வாய்ந்த இரகசிய ஆவணங்கள் பெரும் எண்ணிக்கையில் பிரான்ஸ் புலனாய்வுத்துறையால் சேகரிக்கப்பட்டு ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்காவுக்குப் பரிமாறப்பட்டுள்ளன.

1987 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கையில் றோவின் நடவடிக்கைகளை அறிவதற்காக சென்னையிலுள்ள றோவின் அலுவலகத்திற்குள் சி.ஐ.ஏ. ஊடுருவி ஆவணங்களைச் சேகரித்ததை இந்தியப் புலனாய்வு அமைப்பு கண்டு பிடித்தது.

ஐக்கிய நாடுகள்சபையின் திட்டம் ஒன்றில் பணியாற்றும் அவுஸ்திரேலியப் பெண்மணி ஒருவர் றோவின் புதுடில்லி அலுவலகத்திற்குள் நியமிக்கப்பட்ட பொலிஸ் அதிகாரி ஒருவரின் மனைவி என்பதை நீண்ட காலம் றோவுக்குத் தெரியாமல் இருந்தது என்பது உள்ளிட்ட தகவல்கள் அதில் இடம் பெற்றுள்ளன.

அண்மையில் முன்னாள் றோ அதிகாரி ஒருவர் எழுதிய நூலுக்கு தடை விதிப்பது தொடர்பாக இந்திய அரசு பரிசீலிப்பதாக தெரிவித்திருந்தது. ஈழப் பிரச்சினையில் இந்திய உளவு நிறுவனங்களின் சதி என்ற நூல் பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரனால் தமிழில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்திய மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றத்துக்கே பதில் சொல்ல தேவையற்ற வல்லமை பொருந்திய ஒரு அதிகார அமைப்பாக இந்திய றோ கட்டமைக்கப்பட்டிருந்தாலும் இத்தகைய புத்தகங்கள் மூலமாக மக்கள் மன்றத்தில் அது பகிரங்கப்படுத்தப்பட்டு வருவது அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-1)

# இந்தோனேசியாவில் சுனாமி எச்சரிக்கை

(ஜகர்தா)

இந்தோனேசியாவிலுள்ள வடக்கு மலுகுப் பகுதியில் நேற்று மதியம் கடலில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிக்டர் அளவுக்கு 6.6 ஆக பதிவாகியிருந்த நிலநடுக்கம் ஏற்பட்டதையடுத்து சுனாமிப் பீதி காரணமாக கரையோரப் பகுதி மக்கள் அலறி அடித்துக் கொண்டு தமது வீடுகளை விட்டு வெளியேறினர்.

நிலப் பகுதியிலிருந்து 57 கிலோமீற்றர் தொலைவில் கடலில் இதன் மையம் இருந்தது. இதனால் சுனாமி ஏற்படலாம் என்று கருதி சுனாமி எச்சரிக்கை விடப்பட்டது. ஆனால் சுனாமி தாக்கவில்லை. எனவே 30 நிமிடத்திற்குப் பிறகு சுனாமி எச்சரிக்கை வாபஸ் பெறப்பட்டது. (ச)

# வெள்ளி நற்சிந்தனை 27

## நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

புலமையென்பது எல்லோராலும் மதிக்கப்படும் சிறப்பு நிலையாகும். கல்வி கற்றவர் அனைவரும் புலமையுடையவர் ஆகார். புலமையுடையவரை இரு பகுப்பினராக நமது முன்னோர் விளக்கியுள்ளனர். புத்தகங்களை மிகவும் நன்றாகத் தொகுத்து வைத்திருப்போர் ஒருவகையினர். மற்றொருவர் தொகுக்கப்பட்ட நூல்களில் உள்ள தெளி பொருளைப் பிறருக்கு எடுத்துச் சொல்ல வல்லவர்.

உள்ளத்திலே நிறைய விடயங்களை வைத்திருப்பவர் அவற்றையெல்லாம் எழுத்திலே வடித்து பல புத்தகங்களாக வெளிவரச் செய்வர். அவ்வாறு பல நூல்களை ஆக்குபவர் அவற்றின் பொருளை பிறருக்குத் தெளிவாக எடுத்துரைக்கும் ஆற்றலையும் பெற்றிருக்க வேண்டும் அத்தகைய ஆற்றலுடையவரையே 'புலமையாளன்' எனச் சிறப்பித்துக் கூற முடியும் என்பது நம்முன்னோர் கருத்தாகும்.

சிலர் நல்ல நூல்களையெல்லாம் வாங்கிச் சேர்த்து வைத்திருப்பர். ஆனால் அவற்றை விரித்துப் படித்திருக்கமாட்டார்கள். அவர்களுடைய செயற்பாட்டையும் முன்னோர் அவதானித்துள்ளனர். எனவே மக்கள் யாரோடு சேரவேண்டும் என்பதைச் சொல்லி வைக்க முற்பட்டனர். புலமையாளரை நாடிச் செல்வோரை வழிப்படுத்தவும் எண்ணினர். இருவகைப்பட்ட புலமையாளரை இனம் காட்டியுள்ளனர்.

நூல்களின் நுண்பொருள்களை அறிய வல்லவரே ஓர் அவையில் அங்கம் வகிக்கத் தகுதி பெற்றவராவார். மற்றவர்களுக்குத் தான் கற்றதை எடுத்துச் சொல்லும் புலமைச் சான்றோரால் பலர் பயனடைய முடியும். வாய்மொழி மரபிலே வளர்ந்த கல்வியும் இத்தகைய புலமையாளரால் தலைமுறை தலைமுறையாகக் கையளிப்புச் செய்யப்பட்டு வந்தது.

இன்று தொழிநுட்ப முன்னேற்றத்தால் புத்தகங்களின் ஆக்கம் பெருகிவிட்டது. ஆனால் வாசிக்கும் பழக்கம் அருகி வருகிறது. புத்தகத்தை பொறுமையாய் இருந்து படிக்க விடாமல் மின்னியல் ஊடகங்கள் செல்வாக்குப் பெற்றுவிட்டன. வானொலியும் தொலைக்காட்சியும் சிறுவர் உள்ளங்களை முற்றாக ஈர்த்துள்ளன. எனவே புத்தகங்கள் சொல்லும் கருத்துக்களை எடுத்துச் செல்ல வல்ல புலமைத்திறன் படைத்தோரை அவைக்கு அழைக்க வேண்டும். சிறப்பாகப் பழந்தமிழ் நூல்களின் தொகுப்புக்களில் உள்ளடக்கப்பட்ட சிறப்பான செய்திகளையும் தகவல்களையும் நடைமுறைகளையும் எடுத்து விளக்கும் புலமையாளரை நாட பின்வரும் பாடல் வழிகாட்டுவதாயுள்ளது.

'புத்தகமே சாலத்தொகுத்தும் பொருள் தெரியார்
உய்த்தகம் எல்லாம் நிறைப்பினும்–மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே பொருள் தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு'

(நாலடியார்: 318)

# மல்லாவி மருத்துவமனையில் மருந்துகள் பற்றாக்குறை

## வைத்திய அதிகாரி தகவல்

(கிளிநொச்சி)

மல்லாவி மருத்துவமனையில் மருந்துகள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக மருத்துவமனை அதிகாரி கதிர்ச்செல்வன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் கூறியுள்ளதாவது, மல்லாவி அரசினர் மருத்துவமனையில் நோயாளர்களுக்கான மருந்துகளும் ஏனைய மருந்து வகைகள் பலவும் முடிபடைந்துள்ளன.

குருதி அழுத்த நோயாளர்களுக்கான மருந்து வகைகள் தீர்ந்து விட்ட நிலையில் தொடர்ந்து அவர்களுக்கான மருந்து வகைகளை வழங்க முடியாமையினால் அவர்கள் வாத நோய்க்கு உள்ளாகும் வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. சத்திர சிகிச்சைக்கூடங்களில் கட்டுத்துணி இல்லாமையினால் பெரும் இடர்பாடுகளை நாம் சந்தித்து வருகின்றோம். குழந்தைகளுக்கான பாணி மருந்துகள் முற்றாக தீர்ந்து விட்டன. இதனால் மருந்து வில்லைகளை கொடுக்கும் போது புரைக்கேறி மிக ஆபத்தான நிலை ஏற்படுகின்றது.

நாள் ஒன்றுக்கு 150க்கு மேற்பட்டோர் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். அரசினால் மட்டுப்படுத்தப்பட்டு எமக்கு வழங்கப்படும் மருந்து வகைகள் குறுகிய கால எல்லைக்குள் தீர்ந்து விடுகின்றன. இதனால் ஒரு முழுமையான சேவையை மக்களுக்கு வழங்க முடியவில்லை குடிநீர் மின் பிறப்பாக்கி உள்ளிட்ட வளப்பற்றாக்குறை நிறைந்து காணப்படுவதால் இருக்கின்ற வளத்தினை வைத்துக்கொண்டு ஒரு முழுமையான சேவையினை எங்களால் செய்யமுடியவில்லை.

மல்லாவி மருத்துவமனையை பொறுத்தவரையில் ஐந்து தாதியர் வேலைசெய்ய வேண்டிய சேவையை ஒரு தாதியே செய்கின்றார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவை யாற்றுவதற்று நாம் முன்நிற்கின்ற போதும் இதிலுள்ள வளப்பற்றாக்குறைகளை நீக்கி நிறைவான ஒரு சேவையினை செய்ய வழி செய்து தருமாறு அரசசார்பற்ற நிறுவனங்களை கேட்ட போதும் அவர்களும் பின்னடித்துச் செல் கின்றனர். இதனால் முழுமையான சேவையை மக்களுக்கு வழங்கமுடியவில்லை என்று அவர் கூறியுள்ளார். (சு)

# தம்மை மீளக்குடியமர்த்துமாறு கோரி மூதூர் மக்கள் அரசாங்கத்திற்கு கடிதம்

அரசாங்கத்தினால் உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள திருகோணமலை மாவட்டம் மூதூர் கிழக்கு மற்றும் சம்பூர் பிரதேச மக்கள் அந்த பாதுகாப்பு வலயத்துக்குள் மீளக் குடியேறி வசிப்பதற்கான அனுமதியைக் கோரி சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு நேற்று கூட்டாக மகஜரொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அதிஉயர்பாதுகாப்பு வலயத்திற்குரிய தகுதி வாய்ந்த அதிகாரியான மேஜர் ஜெனரல் பராக்கிரம பன்னிப்பிட்டியவிற்கு மூதூர் இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கம் எனக் குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ள இந்த மகஜரில் யுத்த அகதிகளாக இடம் பெயர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் தங்கியுள்ள 1800க்கு மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்தவர்கள் ஒப்பமிட்டுள்ளனர். அரசியல் அமைப்பில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளின் அடிப்படையில் அங்கு குடியேறி வசிப்பதற்கு தமக்கு எழுத்து மூலம் அனுமதியை வழங்க வேண்டுமென்று கோரியுள்ளனர். (சு-5)

## பெற்றோல் தாங்கி வெடித்ததில் சிப்பாய் உயிரிழப்பு

மட்டக்களப்பில் மோட்டார் சைக்கிளில் பயணித்த படையினர் ஒருவர் கொல்லப்பட்டு மற்றவர் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார். நேற்று முன்தினம் பிற்பகல் 3.35 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு திகிலவெட்டை பகுதியில் படையினர் மோட்டார் சைக்கிளில் பயணித்த போது எண்ணெய்த் தாங்கி வெடித்ததில் ஒருவர் கொல்லப்பட்டதோடு மற்றவருக்கு எரிகாயங்கள் ஏற்பட்டுள்ளது. தொழில் நுட்பக் கோளாறினால் எண்ணெய்த் தாங்கி வெடித்துள்ளதாக படைத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். (சு-5)

## அரச...

தாமே தீர்மானிக்கின்ற வாழ்க்கை தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டும். இன முரண்பாட்டில் தொடர்புபட்ட இரண்டு தரப்பினர் மீதும் ஒரே மாதிரியான அணுகுமுறையை அனைத்துலக சமூகம் கடைப்பிடிக்க வேண்டும்.

விடுதலைப்புலிகள் மீது பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டுவருகின்ற அதேவேளை அரசாங்கத்தின் வன்முறை நடவடிக்கைகளை நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை என்றார் துறொண்ட் ஜென்ஸ்றூட். (சு)

## அரசாங்கம் நடத்திய...

கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. பலா மரச் சந்தியில் தொடங் கிய இந்தப் பேரணி கெத்தாராம வீதியினூடா கச் சென்று மீண்டும் பலாமரச் சந்தியை வந் தடைந்தது.

பேரணியில் ரணில் ஆட்சிக்கு வந்தால் நாடு முடிந்தது, அரசுக்கே நாடு சொந்தம், இராணுவத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்தும் ரணில் ஆட்சிக்கு வந்தால் நாடு அழிந்து விடும், குடும்பிமலை மோதலில் ஜனாதிபதி ஜனாதிபதியே ஆகிய முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

இவ் ஆர்ப்பாட்டப் பேரணிக்கு தலைமை வகித்து அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி பேசியதாவது; வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளமை பாரியதொரு பிரச்சினை அல்ல. மக்கள் அச்சமின்றி சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழும் சூழ்நிலை உருவாகியுள்ளமை மிக முக்கியமானதொரு விடயமாகும்.

மங்கள-ரணில் இணைந்து மக்களை ஏமாற்ற முயற்சித்தாலும் மக்கள் எங்கள் பக்கமே. இந்த அரசை அசைக்க யாராலும் முடியாது. மகிந்தவை மக்களே ஆறுவருடங்களுக்குத் தெரிவு செய்தனர். ஆனால் அவர் இன்னும் 12 வருடங்கள் நாட்டை ஆட்சி செய்வார். ரணில் மூன்று முறை தேர்தலில் தோல்வி கண்டவர். அடுத்த தேர்தலிலும் நாம் அவரை தோற்கடிப்போம் என்றார் அவர்.

இதேவேளை மகிந்த அரசாங்கத்திற்கு ஆதரவாக நேற்று நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களை அரசாங்கத்தில் இணைந்துள்ள கட்சிகள் அனைத்தும் ஒட்டுமொத்தமாக புறக்கணித்துள்ளதாக கூறப்பட்டது.

மகிந்த அரசாங்கம் 19 மாவட்டங்களில் ஏற்பாடு செய்த பேரணிகள் எதிலுமே அரசாங்கத்தில் இணைந்துள்ள கட்சிகள் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மகிந்த அரசாங்கத்தில் இணைந்துள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளின் எந்த ஒரு பிரதிநிதியும் அரசுக்கு ஆதரவான ஆர்ப் பாட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

அதேநேரம் ஐக்கிய தேசியக்கட்சியின் மாற்றுக் குழுவினரும் சட்டச்சிக்கலால் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளமாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டபோதும் இறுதி நேரத்தில் ஒரு சிலர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். (சு-5)

## இந்திய...

செல்வி தங்கேஸ்வரி, கனக சபை ஆகியோரே சந்திப்பில் கலந்து கொண்டனர். சந்திப்பின் போது சர்வதேசம் அரசியல் தீர்வைக்காணுமாறு வலியுறுத்துகின்ற போதும் அரசு இராணுவத் தீர்வில் தீவிரம் காட்டுகிறது. இதன் காரணமாக கிழக்கில் பெரும் அவலம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கை அரசாங்கம் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை தூக்கி எறிந்ததோடு உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முற்படுகிறது. இவையெல்லாம் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கையும் சவாலுமாகும் என இந்தியாவின் சிறப்புத் தூதுவரிடம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் எடுத்து விளக்கியுள்ளனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்கு பதிலளித்த இந்தியாவின் சிறப்புத் தூதுவர் பார்த்தசாரதி தமிழர்களின் சுயாட்சி, சுயநிர்ணய உரிமை மற்றும் இறைமைக்கும் எதிராக இந்தியா ஒருபோதும் செயற்படாது எனத் தெரிவித்தார். அத்துடன் இலங்கை தொடர்பில் இந்தியா மிக உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் பார்த்தசாரதி மேலும் தெரிவித்தார். (சு-5)

## தமிழர்கள்...

சுமந்திரன் தெரிவித்துள் ளார்.

இந்த வழக்குத் தொடர்பில் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் வழக்கு விசாரணை முழுமையாக முடியும்வரை கொழும்பிலிருந்து தமிழ் மக்கள் யாரையும் வெளியேற்றமுடியாது எனவும் அதேபோல் கொழும்பிற்குள் தமிழ் மக்கள் பிரவேசிப்பதையும் யாரும் தடுக்கமுடியாது எனவும் சுமந்திரன் கூறினார்.

இதேவேளை தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களை நடாத்தியோர் கொழும்பு விடுதிகளிலேயே தங்கியிருந்தனர் என்று உயர் நீதிமன்றத்தில் அரசாங்கம் தெரிவித்துள்ளது. கொழும்பு விடுதிகளில் தங்கியிருந்த தமிழர்களை பலவந்தமாக வெளியேற்றியமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்கள் மீதான விசாரணை உயர் நீதிம்ன்றத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த விசாரணைகளின்போது அரச தரப்பின் முன்னிலையான சட்டத்தரணி பாலித பெர்னாண்டோ, தமிழர்களை வெளியேற்றிய விவகாரம் தொடர்பாக அரசின் நிலைப்பாட்டை விளக்கினார்.

கொழும்பில் விடுதிகளில் இருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட்டமை என்பது தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கை அல்ல. விடுதிகளில் தங்கியிருந்து தற்கொலைக் குண்டுத் தாக்குதல் பல நடத்தப்பட்டுள்ளன. இதனால் தான் தமிழர்கள் வெளியேற்றப்பட்டனர் என்று பாலித பெர்னாண்டோ தெரிவித்தார். (சு)

## தமிழ் நாட்டில்...

பற்றிய பதிவுகளை மேற்கொள்ளவில்லை எனக் கூறப்பட்டுள்ளது.

தலைமறைவாகியுள்ளவர்கள் தொடர்பாக கியூப்பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழ் நாட் டில் தஞ்சம் கோரும் ஈழத் தமிழர்கள் மீது அங்குள்ள பொலிஸார் மேற்கொள்ளும் கெடு பிடிகள் காரணமாக மக்கள் பதிவுகளை மேற்கொள்ள விரும்பாது தலைமறைவாகி வருவதாக தெரிய வருகிறது. (சு)

## முத்தையன்கட்டில்..

கப்பட்டது.

முதலாவது தாக்குதல் நேற்றுக் காலை 9.10 மணிக்கும் இரண்டாவது தாக்குதல் மதியம் 12.10 மணிக்கும் இடம்பெற்றுள்ளது. இத்தாக்குதல் மூலம் ஒட்டுசுட்டான் முத்தையன் கட்டில் உள்ள புலிகளின் பயிற்சி முகாமை தாங்கள் தாக்கியுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடகமத்திய நிலையம் தெரிவித்தது. (சு-5)


### யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் வருடாந்த பொதுக் கூட்டம்

எதிர்வரும் 12.08.2007 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

அனைத்து அங்கத்தவர்களும் தவறாது சமுகம் தரவும். பிரேரணைகள் 04.08.2007 சனிக்கிழமைக்கு முன்னர் எமக்கு அனுப்பி வைக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இதற்கு பின்வரும் பிரேரணைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

-செயலாளர்.

(சி-250)



### ஸ்ரீஅம்மா பகவான் சரணம்



ஸ்ரீ அம்மா பகவான் அறநெறி சத் சங்கத்தினால் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் நடைபெற்று வந்த தியான நிகழ்வுகள் 28.07.2007ல் இருந்து யாழ். இந்து ஆரம்ப பாடசாலை தியான மண்டபத்தில் நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம். இவ்வாரம்ப நிகழ்வு 2.30 மணியில் இருந்து 5.30 வரையிலும் நடைபெறும்.

ஸ்ரீஅம்மா பகவான் பொற்பாதங்களில்
ஸ்ரீகல்கி ஆன்மீக மையம்-யாழ்கிளை
மணியர்பதி லேன், கொக்குவில் மேற்கு.
தொ.பேசி.021 222 2935

(சி-249)


## அரசாங்கத்திற்கு எதிரான...

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு எதிராக கொழும்பில் நேற்று பிற்பகல் பாரிய பேரணி தொடங்கியது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அதிருப்தியாளர்கள் உருவாக்கிய சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவும் இணைந்து மக்கள் அலை என்ற பெயரில் அரசுக்கு எதிரான இந்தப் பேரணியை ஏற்பாடு செய்திருந்தனர்.

ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் சுதந்திரக் கட்சி மக்கள் அணியினரும் இணைந்து இந் தப் பேரணியை முன்னெடுத்துள்ளனர். பேர ணியில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

நேற்று மதியம் 1.30 மணிக்கு கொழும்பு ஹெம்பல் மைதானத்தில் இருந்து ஆரம்ப மாகியது. பொறளைச் சந்தி, மருதானை வீதி, சொய்சா சுற்றுவட்டம், லிப்டன் சதுக்கம் ஊடாக கைப்பாக் பூங்கா நோக்கி பேரணி நகர்ந்து சென்றது.

பேரணியில் கொழும்பின் புறநகர் பகுதி யில் இருந்து வந்த ஐக்கிய தேசியக்கட்சி, சுதந் திரக்கட்சியின் மக்கள் அணியின் ஆதரவாளர்கள் மற்றும் அதிருப்தியாளர்கள், பல்லாயிரக் கணக்கில் இணைந்து கொண்டனர்.

நாடாளுமன்ற சுற்றுவட்டம் மற்றும் கொழும்பின் முக்கிய பகுதிகளில் இருந்தும் புறப்பட்ட மகிந்த அரசாங்கத்திற்கு எதிரான ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதான பேரணியுடன் இணைந்து கொண் டனர்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் மகிந்த அரசாங் கத்திற்கு எதிரான முழக்கங்கள், அட் டைகள், மனித உரிமை மீறல்களை கண்டிக் கும் மிகப்பெரிய பதாகைகள், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவின் தலைவர்களான மங்கள சமரவீர, சிறிபதி சூரியாராட்சி ஆகியோரின் புகைப்படங்கள் ஆகியவற்றை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்திச் சென்றனர்.

மகிந்த அரசாங்கத்தை கேலி செய்யும் ஊர்திகளும் பேரணியில் இடம்பெற்றிருந்தன. ரணில் விக்கிரமசிங்க, மங்கள சமரவீர, சிறிபதி சூரியாராட்சி, ரிரான் அலஸ் ஆகியோரும் பேரணியில் இணைந்து சென்றனர்.

இந்தப் பேரணி மகிந்த அரசாங்கத்திற்கு எதிரான முதலாவது செயற்பாடு தான். மேலதிகமான பல செயற்பாடுகளை நாங்கள் முன்னெடுப்போம் என்று ஆர்ப்பாட்டத்தில் பேசிய ரணில் தெரிவித்தார்.

பேரணி கைப்பாக் மைதானத்தில் முடிபடைந்து அதன்பின்னர் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. எதிர்க்கட்சிகளின் இந்தப் பேரணிக்கு எதிராக அரசாங்கமும் பேரணியை நடத்தியதால் பாரிய கலகம் ஏற்படலாம் என்ற அச்சத்தில் முப்படையினரும் பெரும் எண்ணிக்கையில் கொழும்பில் குவிக்கப்பட்டிருந்தனர். இப் பேரணிக்காக கொழும்பில் சில பாகங்களில் போக்குவரத்தும் தடை செய்யப்பட்டிருந்தது. (சு)


### NEW CITY WORK SHOP

சகலவிதமான T.V., ரேடியோ, கிறைண்டர், சார்ஜர் லைற் மற்றும் மின்சார உபகரணங்கள் சிறந்த முறையில் பழுது பார்த்துக் கொடுக்கப்படும்.

நியூ சிற்றி வேர்க் ஷொப்
135, கஸ்தூரியார் வீதி,
(குளத்துக்கு முன்பாக)யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.222 3226

(சி-247)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.07.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.